T/300/0154
0154

சீன-இந்திய

எல்லைப் பிரச்சினையின் வெளிச்சத்தில்

# நேருவின் தத்துவத்தைப் பற்றி

## மேலும் விளக்கம்

3965

08

இலங்கையிலுள்ள மக்கள் சீனக் குடியரசின்
தூதுவராலயத்தின் தகவல் பகுதி

1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா. க. சிரு செல்வன். 300

## சீன - இந்திய எல்லைப் பிரச்சினையின் வெளிச்சத்தில்

# நேருவின் தத்துவத்தைப் பற்றி மேலும் விளக்கம்

"மக்கள் தினசரி" பத்திரிகையின் ஆசிரியப் பகுதியால் தயாரிக்கப்பட்டது.

1962 ஒக்டோபர், 27.

சீன – இந்திய எல்லைப் பிரச்சினையை சமாதானபூர்வமாக, பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்ப்பதற்கு சீன அரசாங்கம் சமர்ப்பித்து வந்த யோசனைகளை பல வருஷங்களாக, பிடிவாதத்துடன் நிராகரித்து வந்த நேரு, சீன மண் மீது படையெடுப்புக்கு மேல் படையெடுப்பு நடத்த துருப்புகளை ஏவியுள்ளார். பலாபலன்களை கர்வத்துடன் உதாசீனம் செய்தவராய், சீன எல்லைகளை சீனத்துருப்புக்களிடமிருந்து "விடுதலை" செய்யும்படி, 1962 அக்டோபர் 12-ந் திகதி நேரு பகிரங்க கட்டளை விடுத்தார். இதைத் தொடர்ந்து, சீன – இந்திய எல்லையின் கிழக்கு, மேற்கு மண்டலங்களில் இந்திய ஆக்கிரமிப்புத் துருப்புக்கள் பெருமளவில் தாக்குதல் நடத்தின. இதன் விளைவாக, சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் என்றும் கண்டறியாத பாரதூரமான ராணுவ கைகலப்புகள் ஏற்பட்டன.

மோதல்களை தவிர்க்க சீனா என்றுமே விரும்பி வந்திருக்கிறது. நாம் பிரதியொரு சந்தர்ப்பத்திலும் பொறுமையையும் கட்டுப்பாட்டையும் அனுஷ்டித்து வந்திருந்த போதிலும், எதை நாம் அணுவளவும் விரும்பவில்லையோ, அது நடந்துவிட்டது. சீனா, இந்தியாவின் எந்தப் பகுதியிலும் எக்காலத்திலும் ஊடுருவியது கிடையாது; ஸ்வீகரித்ததுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையாது. ஆனல், சீன மண்ணில் பெரும் பகுதியை ஸ்வீகரித்துள்ள இந்தியத் தரப்பு, எல்லை நிலைமையை மாற்றவும், ஆக்கிரமிப்பை விஸ்தரிக்கவும் திட்டமிட்ட பலாத்கார பிரயோகம் செய்து வந்துள்ளது. முன் நிபந்தனையின்றி உடனடியான பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டுமென்று இந்தியாவை சீன பல முறைகள் கோரியுள்ளது. ஆனல், சீன மண்ணின் பெரும் பகுதிகளிலிருந்து சீனத் துருப்புகள் வாபசாக வேண்டுமென்று பேச்சுவார்த்தைக்கு முன் நிபந்தனை விதித்து, பேச்சுவார்த்தைகளை நியாயமற்ற முறையில் நேரு நிராகரித்துவிட்டார். சீன இந்திய எல்லையின் மேற்குக் கிழக்கு மண்டலங்களில், சீன மண்ணுக்குள் பல முறைகள் திரும்பத் திரும்ப இந்தியத் துருப்புகள் ஊடுருவல் நடத்திய போதும், மோதல்கள் தவிர்க்கப்பட வேண்டுமென்ற சீன மக்கள் அரசாங்கத்தின் கட்டளையை சீன எல்லைக் காவல் வீரர்கள் உறுதியாக கடைப்பிடித்து வந்தனர். அவர்களுடைய கண் முன்னலேயே சீன மண் ஸ்வீகரிக்கப்பட்ட போதுங் கூட அவர்கள் முதல் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில்லை. அவர்கள் பின்வாங்குகையில், இந்தியத் துருப்புகள் தொடர்பை துண்டித்த போதும், அவர்களுடைய ஸ்தலங்களிலிருந்து ஒரு சில நூறு மீட்டர் அல்லது ஒரு சில டஜன் மீட்டர் அல்லது ஒரு சில மீட்டர் தூரத்தில் ஆக்கிரமிப்புக்கான காவல் நிலையங்கள் நிறுவப்பட்ட போதுங் கூட, அவர்கள் முதல் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தது கிடையாது. இந்தச் சூழலில்தான் எம்முடைய வீரர்களில் அநேகரை இந்தியத் துருப்புகள் கொல்லவும், காயப்படுத்தவும் செய்தனர். எம்முடைய பொறுமையையும் சுய-கட்டுப்பாட்டையும் பலவீனமாகக் கருதிய நேரு அரசாங்கம், எம்மீது சண்டித்தனம் நடத்தலாம் என்றெண்ணியது. இந்தியத் துருப்புகள் சீன மண்ணுக்குள் படிப்படியாக முன்னேறி, ஆழமாக ஊடுருவி, ஆக்கிரமிப்புக்கான கேந்திர ஸ்தானங்களை நிறுவி, இறுதியாக, தாக்குதலுக்கான பாசறைகளை அமைத்து, 1962 அக்டோபர் 20-ந் திகதி பெருமளவில் பொதுத் தாக்குதலை தொடுத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுண்மைகளும், சீன - இந்திய விவகாரத்தில் சமீப காலத்தில் ஏற்பட்டுள்ள நிலைமைகளும் பின்வரும் முடிவுக்கு வழிகோலுகின்றன. இன்றைய பாரதூரமான ராணுவ மோதலுக்கு நேரு அரசாங்கத்தின் திட்டமிட்ட தூண்டுதல்களும், ஆக்கிரமிப்புமே பரிபூரண காரணங்களாகும்.

இன்று, முழு உலகமுமே சீன – இந்திய எல்லைச் சம்பவங்களை கூர்ந்து அவதானித்து வருகிறது. நேருவின் தலைமையில் இந்திய ஆளும் வட்டாரங்கள் சீன – இந்திய எல்லைத் தகராறை கட்டவிழ்த்து இன்று மூன்று வருஷங்களுக்கு மேலாகின்றன. அவர்கள் சமாதானபூர்வமான உடன்பாட்டுக்கு முட்டுக்கட்டையிட்டும், சீனவைத் தூண்டியும், சீன மீது பெருமளவு ராணுவ தாக்குதலைத் தொடரும் வரையும் ஏன் செல்ல வேண்டும்? இவ்விஷயத்தின் ஜீவாதாரமான உண்மையை தோலுரித்துக் காட்டவும், சீன – இந்திய எல்லைத் தகராறின் பின்னணியையும் அடிப்படைக் காரணத்தையும் துலாம்பரப்படுத்தவும், சம்பந்தப்பட்ட உண்மைகளை விரிவாக கிரஹித்து, நுணுக்கமாக சரித்திரக் கண்ணேட்டத்தில் பரிசீலனை செய்வது அவசியமாகிறது.

"திபேத்திய புரட்சியும் நேருவின் தத்துவமும்" என்ற தலைப்பில் மூன்று வருஷங்களுக்கு முன்னர் இப்பத்திரிகை ஒரு கட்டுரையை பிரசுரித்தது. சீனவுக்கு சொந்தமான திபேத்தில் இந்திய ஆளும் வட்டாரங்கள் நடத்திய தலையீட்டின் வெளிச்சத்தில் நேருவின் "தத்துவத்தை" அக்கட்டுரை. பரிசீலனை செய்தது. சீன – இந்திய எல்லைப் பிரச்சினையின் வெளிச்சத்தில், நேருவின் "தத்துவத்தை" மேலும் பரிசீலனை செய்ய நாம் உத்தேசித்துள்ளோம்.

# I

நேருவின் தலைமையில் இந்திய ஆளும் வட்டாரங்கள் சீன - இந்திய எல்லைச் சம்பவங்களைத் தூபமிட்டு சீன மீது படையெடுப்பு வரை சென்றிருப்பது அகஸ்மாத்தாக நடந்ததன்று. இதே மாதிரியான தலையீட்டை சீனவின் திபேத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் அவர்கள் நடத்தியதுண்டு. இவையிரண்டும், ஏகாதிபத்திய வாதிகளின் நலன்களுடன் இறுக இணைக்கப்பட்ட இந்திய பெரும் பூர்ஷுவாக்களினதும், பெரும் நிலப்பிரபுக்களினதும் வர்க்கத் தன்மையால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

சரித்திரத்தைப் புரட்டி பார்ப்போம்.

*1944*-ல் நேரு எழுதிய, "நான் கண்ட இந்தியா" என்ற நூலின் பின்வரும் பகுதியைப் பாருங்கள்:

"......... இந்தியா ஒரு நேரடியான பசிபிக் (சமுத்திர) மண்டல நாடாக இல்லாத போதிலும், அங்கு தவிர்க்க முடியாத செல்வாக்கு நடத்தும். இந்து மஹா சமுத்திர மண்டலத்திலும், தென் கிழக்கு ஆசியாவிலும், மத்திய கிழக்கிலும் அரசியல் பொருளாதார நடவடிக்கைகளில் இந்தியா நடுநாயகமாக வளர்ச்சி பெறும். அதன் நிலைமை காரணமாக, வருங்காலத்தில் துரிதமாக வளர்ச்சி பெறப்போகும் ஒரு பாகத்தில், இந்தியா பொருளாதார ராணுவ கேந்திர முக்கியத்துவம் பெறும். இந்தியாவின் இரு புறங்களிலும் சமுத்திரத்தின் கரையைச் சார்ந்த நாடுகளின் —ஈரான், ஈராக், ஆப்கனிஸ்தான், இந்தியா, இலங்கை, பர்மா, மலாயா, சியாம், ஜாவா ஆகியவற்றின் இந்து மஹா பிராந்திய கூட்டமைப்பு ஒன்று உருவாகும் பட்சத்தில், நடப்பு கால சிறுபான்மை பிரச்சினைகள் மறைந்துவிடும்; அல்லது பூரணமாக மாறுபட்ட பகைப்புலனில் பரிசீலனை செய்யப்படும்.

"........காரணம். சிறிய தேசிய ராஜ்யத்தின் காலம் மலையேறிவிட்டது. கலாச்சார சுயாட்சிப் பிரதேசமாக அது நீடிக்குமே தவிர, சுயாதீன அரசியல் அமைப்பாக நீடிக்க முடியாது" (மூன்றும் பதிப்பு பக்கம் *510 - 511*, மெரீடியன் புக்ஸ் லிமிட்டட்; லண்டன். *1951*).

இது இரண்டு விஷயங்களை துல்லியமாக விளங்கிக் கொள்வதற்கு உதவுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவதாக, இந்திய சரித்திரம் என்றும் கண்டிராத மாபெரும் சக்கிராதிபத்தியத்தை ஸ்தாபிப்பதே நேருவின் பேரவா. இப்பெரும் சக்கிராதிபத்தியத்தின் செல்வாக்கு மண்டலம்,மத்தியகிழக்கு முதல் தென்கிழக்கு ஆசியா வரை உள்ள நாடுகளை உள்ளடக்குவதுடன், சென்ற காலத்தில் பிரிட்டிஷ் சக்கிராதிபத்தியம் ஆசியாவில் நிறுவிய கலோனியல் அமைப்பை விட விஸ்தீரணமானதாய் இருக்கும்.

இரண்டாவது, "பொருளாதார அரசியல் நடவடிக்கைகளில்" இந்தியாவை நடுநாயகமாகக் கொண்ட 'பிராந்திய கூட்டமைப்பு" ஸ்தாபிதமாகும் பொழுது, அல்லது, வேறு விதத்தில் சொல்லப் போனால், நேருவால் கற்பனை செய்யப்பட்ட இந்திய மாபெரும் சக்கிராதிபத்தியம் உருப்பெறும் பொழுது, இப்பிராந்தியத்தின் "சிறுபான்மை பிரச்னை மறைந்து விடும்." நேருவின் கூற்றுப்படி "சிறிய தேசீய ராஜ்யத்தின் காலம் மலையேறி விட்டது," 'கலாச்சார சுயாட்சிப்பிரதேசமாக அது நீடிக்க முடியுமேதவிர,சுயாதீன அரசியல் அமைப்பாக நீடிக்க முடியாது". ஒரே வார்த்தையில், நேருவின் சக்கிராதிபத்தியத்தில் அது கப்பம் செலுத்தும் சிற்றரசாக மாத்திரமே மாறமுடியும்.

இவை, 18 வருஷங்களுக்கு முன்னர் நேருவால் எழுதப்பட்டவை. இந்திய சுதந்திரம் பிரகடனமானதற்கு வெகு காலத்துக்கு முன்னரே நேரு மாபெரும் இந்திய சக்கிராதிபத்தியத்தைப் பற்றி கனவு கண்டு கொண்டிருந்தார். இது இந்திய பெரும் பூர்ஷுவாக்களினதும் பெரும் நிலபிரபுக்களினதும் நில விஸ்தரிப்புக் கொள்கையின் உண்மையான "கண்டு பிடிப்பாகும்."

இப்பிற்போக்கு இந்திய பெரும் பூர்ஷுவாக்களினதும் நிலபிரபுக்களினதும் நிலவிஸ்தரிப்புக் கொள்கைகள் நேருவின் தத்துவத்தின் பெரும் பகுதியாக அமையும்.

இந்தியா, பிரிட்டிஷ் ஏகாதியத்தியவாதிகளின் கலோனியல் ஆட்சியின் கீழ் நீண்டகாலமாக இருந்துவந்தது. இந்திய பெரும் பூர்ஷுவா கும்பல் பிரிட்டிஷ் ஏகாதியத்தியத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் பாலூட்டி வளர்க்கப்பட்ட புல்லுருவி வர்க்கமாகும் பிரிட்டிஷ் ஏகபோக முதலாளி வர்க்கத்துடன் அதற்குள்ள அந்நியோன்ய உறவு முறைகளை நேரு நன்கு பிரதிபலிக்கிறார். "என்னுடைய விருப்பு வெறுப்புக்களில் நான் இந்தியன் என்பதை விட, பெரும்பாலும் ஆங்கிலேயனாகவே இருக்கிறேன்". என்று நேரு கூறியிருக்கிறார். (மைக்கல் பிரெக்கர்: நேரு - ஒரு அரசியல் சரிதை, பக்கம் 50, ஒகஸ்போர்ட் சர்வகலாசாலை பிரசுரம், லண்டன் 1959) இந்திய பெரும் பூர்ஷுவா வர்க்கத்தின் பொருளாதார சக்திகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளால் கட்டி வளர்க்கப்பட்டு, பிரிஷ்டிஷ் ஆட்சிகாலத்திலேயே விருத்தியடையத் தொடங்கி, விசேஷமாக முதலாம் உலக யுத்தத்தின் போதும், இரண்டாம் உலக யுத்தத்தின் போதும் மேலும் விருத்தியடைந்தன. ஒரு பெரும் நாடு என்ற முறையில் இந்தியா, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் கிழக்கில் அதன் பொருளாதார அரசியல் மத்திய பீடமாக கருதப்பட்டு, "பிரிட்டிஷ் ஏகாதிபத்திய மகுடத்தின் சுடர்மணி" என்று வர்ணிக்கப்பட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளின் இந்தியா சம்பந்தமான இக்கணிப்பு இந்திய மக்களை அவமதிப்பதாகும். எப்படியிருப்பினும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை நம்பியிருந்த இந்திய பெரும் பூர்ஷுவா வர்க்கம், இந்தியா "ஆசியாவின் மையஸ்தானம்" என்னும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளின் கருத்தை வாங்கிக் கொண்டது. இதுவே இந்திய பெரும் சக்கிராதிபத்தியம் என்னும் நேருவின் கருத்துக்கு வழிவகுத்துள்ளது.

இந்திய சுதந்திரம் பிரகடனம் செய்யப்பட்டதற்கு பின்னர் நேரு தலைமை வகிக்கும் இந்திய ஆளும் வட்டாரங்கள், பிரிட்டிஷ் கலோனியல் ஆட்சியாளர்கள் வைத்துச் சென்ற பிதுரார்ஜிதத்தை ஏற்றுக்கொண்டதுடன், அவற்றை பேணிப் பாதுகாக்கவும் தம்மாலானவரை முயன்றனர். குறுகிய தேசிய வெறிவாத, நில விஸ்தரிப்புக் கொள்கையை அமுல் நடத்திச் செல்வதில் தலைக்கர்வம் கொண்டவர்களாய் விட்டனர். ஆசியாவிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா மாத்திரம் தான், தன் கீழ் "பாதுகாப்பு நாடு" ஒன்றை வைத்துள்ளது. இந்தியாவைச் சுற்றிலுமுள்ள நாடுகளின் உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களில் தலையிடவும், அவைகளின் பொருளாதாரத்தையும் வர்த்தகத்தையும் கட்டுப்படுத்தவும், அவைகளின் பூரணமான கீழ்ப்படிதலை நிர்ப்பந்திக்கவும், இந்திய ஆளும் வட்டாரங்கள் சகல சாதனங்களையும் பிரயோகித்துள்ளன. இது ரகசியம் அன்று. நேபாளிய வாரப் பத்திரிகையான, "நயா ஸமாஜ்" சமீபத்தில் பிரசுரித்த கட்டுரையொன்றில் பின்வருமாறு கூறுகிறது: "நேபாளம் எப்பொழுதும இந்தியாவுடன் நட்புறவு பாராட்டி வந்துள்ளது. ஆனல், இதற்கு நேர் விரோதமாக இந்தியாவோ, எப்பொழுதுமே நேபாளத்தின் சுயாதீனத்தின மீது பயமுறுத்தும் பார்வை செலுத்தியிருக்கிறது. நேபாளம் சுதந்திர சுயாதீன நாடாக தொடர்ந்தியங்குவதையும், முன்னேறுவதையும் இந்தியா விரும்பவில்லை. நேபாளம் இந்தியாவுக்கு சரணகதியடைவதையும், இந்திய ஆக்ஞைக்கு அடிபணிந்து நடப்பதையும் இந்தியா விரும்பியுள்ளது. இந்தக் குறிக்கோளையடையவே இந்தியா செயல்படுகிறது.' இந்தக் குறுகிய தேசீய வெறிவாத நில விஸ்தரிப்புக் கொள்கையை, நேபாள விவகாரத்தில் மாத்திரமோ, தனிப்பட்ட விவகாரங்களில் மாத்திரமோ நேரு அரசாங்கம் பின்பற்றி வரவில்லை,

இந்த நில விஸ்தரிப்பு கண்ணோட்டத்தில் தான் சீனவின் திபேத் பிராந்தியத்தை, இந்திய செல்வாக்கு மண்டலமாக இந்திய ஆளும் வர்க்கம் கணிக்கிறது. இந்திய சுதந்திரம் பிரகடனப் படுத்தப்பட்ட நான்காம் வருடம் அதாவது 1950-ல் தமக்குச் சொந்தமான திபேத் பிரதேசத்தை சீன மக்கள் விடுதலை செய்த போது நேரு அரசாங்கம் தலையிட்டது. பின்னர், திபேத் பிரதேசத்து சமுதாய மேல் தடத்து பிற்போக்குக் கும்பல் கட்டவிழ்த்த தேசத் துரோகத்தையும், கலகத்தையும் தூண்டிவிட்டு பின்பலம் கொடுத்தது. இந்த ஸ்தூலமான உண்மைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துத் தான் நேருவின் நிலவிஸ்தரிப்பு "தத்துவத்தை" புரிந்து கொள்ள நாம் முற்பட்டோம்.

சீன-இந்திய எல்லைப் பிரச்சினைப் பற்றிய நேருவின் கொள்கையும், சீன-இந்திய எல்லை மோதல்களை உருவாக்கிய முழு சூழ்ச்சி, வழி வகைகளும், இந்திய பெரும் பூர்ஷுவா வர்க்கத்தினதும் பெரும் நிலபிரபுக்களினதும் நில விஸ்தரிப்பு தத்துவத்தின் மீது புதிய வெளிச்சத்தை பாய்ச்சியுள்ளன.

சீன-இந்திய எல்லை ஒருகாலும் சம்பிரதாய உத்தியோகபூர்வமாக நிர்ணயிக்கப்படவில்லையென்பது யாவரும் அறிந்ததே. ஆனால் சரித்திரப் போக்கில், அநேக வருடங்களுக்கு முன்னர் வகுக்கப்பட்ட பாரம்பரிய,வழக்கில் உள்ள எல்லைக்கோடு ஒன்று உண்டு. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவை ஆண்டு வந்த காலத்தில், சீனாவின் திபேத் பிரதேசத்தை தொடர்ச்சியாக அரித்து வந்ததனால் எல்லைத் தகராறுகள் சர்வ சாதாரணமாக நடந்த சம்பவங்களாய் இருந்தன. இந்திய சுதந்திரம் பிரகடனப் படுத்தப்பட்ட பின்னர், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் தமதாக்கிக் கொண்ட சீனப் பிரதேசங்களையும், தமதாக்கிக் கொள்ள முயன்று தவறிப் போன பிரதேசங்களையும், இந்தியாவுக்குச் சொந்தமானவை என்று இந்திய ஆளும் வட்டாரங்கள் கருதின. நவ சீனத்தின் ஸ்தாபிதத்தை தொடர்ந்த காலகட்டத்தில் கொரியா மீது அமெரிக்க ஏகாதிபத்தியம் தொடுத்த ஆக்கிரமிப்பு யுத்தத்தால் சீனாவின் பந்தோபஸ்துக்கு தீவிரமான ஆபத்து ஏற்பட்டது. இதைப் பயன்படுத்தி, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் செய்யத் தயங்கியதை இந்திய ஆளும் வட்டாரங்கள் தலைகொழுத்தப் போக்கில் நடத்தினர். சீனா என்றுமே அங்கீகரிக்காத மக்மோகன் கோடு என்றழைத்துக் கொள்ளும் பிராந்தியம் வரை இந்தியாவின் வடகிழக்கு எல்லையை பலவந்தமாகத் தள்ளி 90,000 சதுர கிலோமீட்டருக்கு அதிக விஸ்தீரணமான சீன பிரதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தை அவர்கள் கைப்பற்றினர். இதைத் தொடர்ந்து, மக்மோகன் கோடு என்றழைத்துக் கொள்ளும் கோட்டுக்கப்பாலும், பல முனைகளில் தாண்டினர். 1959-ம் வருடம் மார்ச் 22-ந் தேதி, அதாவது திபேத்திய சமுதாய மேல் தட்டு பிற்போக்குக் கும்பல் கலகத்தை உண்டு பண்ணி லாஸா நகரில் இருந்த மக்கள் விடுதலை படைப் பிரிவுகள் மீது தாக்குதல் நடத்திய நான்காம் தினம், இந்திய அரசாங்கத்தால் யதேச்சாதிகார முறையில் மாற்றப்பட்ட பூகோளப் படங்களின் அடிப்படையில் சீனப் பிரதேசங்கள் மீது பாத்தியதை கொண்டாடி சீனப் பிரதமர் சூ-என்-லாய்க்கு நேரு அவசர அவசரமாய் கடிதம் எழுதினார். கிழக்குப் பிரிவில் சீனவுக்குச் சொந்தமான 90,000 சதுர கிலோமீட்டருக்கு மேற்பட்ட நிலத்தையும் இந்தியாவுடன் இணைக்க வேண்டுமென்று கோரியிருந்ததுடன், எக்காலத்திலுமே சீன ஆட்சிக்குட்பட்டு வந்த மேற்குப் பிரிவில் உள்ள சீனப் பிரதேசத்தில் 33,000 சதுர கிலோ மீட்டர் நிலத்தின் மீதும் பாத்தியதை கொண்டாடினர். பாத்தியதை கொண்டாடப்பட்ட மொத்த நிலத்தின் விஸ்தீரணம் சீன ஃபூகின் மாகாணத்தின் சுமார் அரைவாசி அளவாய் இருக்கும், அல்லது பெல்ஜியத்தை விட நான்கு மடங்கு அல்லது ஒல்லாந்தை விட மூன்று மடங்கும் பெரிதாக இருக்கும்.

இந்த நியாயமற்ற கோரிக்கைகளை சீன ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கடந்த மூன்றுக்கு அதிகப்பட்ட ஆண்டுகளாக நேரு வற்புறுத்தி வருவதுடன், தொடர்ச்சியாக சீன மண்ணை தாக்குவதிலும் கைப்பற்றுவதிலும் உடும்புப் பிடியாய் நிற்கிறார். நேருவின் நில விஸ்தரிப்புத் "தத்துவம்" பின்வருமாறு அமைந்துள்ளது: "நான் கைப்பற்றியுள்ள இடங்கள் என்னுடையதே; நான் கைப்பற்ற எண்ணியுள்ளவையும் என்னுடையதே. இன்று உங்களுடைய மண்ணில் ஓரங்குல நிலத்தைக் கைப்பற்றுவது சாத்தியமாய் இருந்தது; நாளை நிச்சயம் ஒரு யார் நிலத்தை நான் கைப்பற்றுவேன்." இது முற்றிலும் நியாயமற்றது; அறவே தவறானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனாவும் இந்தியாவும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு ஆளாகி பொது அனுபவத்தை பெற்றிருப்பதாலும், சுதந்திர இந்தியாவும் நவ சீனாவும் ஸ்தாபிதமாகி விட்டதாலும், நட்புடன் வாழவும், தம் வேற்றுமைகளை சமாதான பூர்வமான பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும் என்று சீன அரசாங்கம் எப்போதுமே நம்பி வந்திருக்கிறது. 1959–ல் இந்தியத் தரப்பு தூண்டிவிட்ட எல்லை மோதல்களைத் தொடர்ந்து, இரு நாட்டுப் பிரதமர்களுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டுமென்று, சீனா முன்முயற்சி செய்தது. சீன–இந்திய எல்லைப் பிரச்சினையை தீர்க்கும் நோக்கத்துடன் சீனப் பிரதமர் சூ-என்-லாய் 1960 ஏப்ரில் மாதத்தில் புதுடில்லிக்கு விஜயம் செய்து இந்தியப் பிரதமர் நேருவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி, எல்லைப் பிரச்சினைக்கு தீர்வு காண உதவக் கூடிய பூர்வாங்க உடன்பாட்டை ஏற்படுத்த பெரிதும் முயற்சி எடுத்தனர். ஆனால், சீன தரப்பின் உண்மையான பிரயத்தனங்களுக்கு இந்தியத் தரப்பிலிருந்து ஆதரவு கிடைக்கவில்லை. இதைத் தொடர்ந்து ஏற்பட்ட சீன இந்திய உத்தியோகஸ்தர்களின் சந்திப்பும், தோற்றுவித்திருக்க வேண்டிய பலாபலன்களை அளிக்கத் தவறியது.

குறிப்பிட்ட காலத்துக்குள் இரு தரப்பினரும் எல்லைப் பிரச்சினை சம்பந்தமாக இணக்கம் காண முடியாது போனாலும், இது எல்லை மோதல்களில் முடிவடையக் கூடாது என்று எப்போதுமே சீன அரசாங்கம் கருதி வந்துள்ளது. இரு தரப்புத் துருப்புகளும் எல்லைப் பூராவும் 20 கிலோமீட்டர் பின்வாங்க வேண்டுமென்றும், இரு தரப்புத் துருப்புகளும் ஒருவரையொருவர் ராணுவ முஸ்தீப்புடன் எதிர்கொண்டு நிற்பதையும் மோதல்களை தவிர்க்கவும், எல்லையில் ரோந்து வேலை நிறுத்தப்பட வேண்டுமென்றும் சீனா திரும்பத் திரும்ப 1959 முதல் கோரி வந்தது. எல்லையில் நெருக்கடியைத் தளர்த்தும் எண்ணத்துடன், எல்லையில் தன் தரப்பில் சீனா ரோந்து படையை ஒருதலைப் பட்சமாக நிறுத்திக் கொண்டது. சீனா மேற்

கொண்ட இந் நடவடிக்கை, சீன-இந்திய எல்லையில் சில காலமாக ஓரளவு அமைதியை ஏற்படுத்தியது. இரு தரப்பினரும் 20 கிலோமீட்டர் பின்வாங்க வேண்டுமென்று சீனு சமர்ப்பித்த யோசனைக்கு இந்தியா இணங்கியிருந்தால், இரு தரப்புத் துருப்புகளுக்குமிடையே ஏற்பட்ட ராணுவ மோதல்களை தவிர்ப்பது நிச்சயம் சாத்தியமாய் இருந்திருக்கும். இந்தியத் தரப்பு பின்வாங்குவதற்கு இணங்கி இரா விடினும், சீனு ஒருதலைப் பட்சமாக ரோந்து வேலையை நிறுத்தியதால் ஏற்பட்ட நிலைமையை இந்தியா கௌரவித்து சீனு மீது படையெடுக்காமலிருந்தால், இம் மோதல்களை தவிர்த்திருக்க முடியும். நாம் எதிர்பார்த்ததற்கு முரணுக சீன எல்லைக் காவல் வீரர்கள் ஒருதலைப் பட்சமாக அனுஷ்டித்த ரோந்து நிறுத்தத்தைப் பயன் படுத்தி, நேரு அரசாங்கம், சீன-இந்திய எல்லை நெடுகிலும் முன்னேறி, சீன மண்ணுக்குள் ஆழமாக ஊடுருவி அநேக ஆக்கிரமிப்பு நிலையங்களை நிறுவியதுடன் ஆயுத மோதல்களை தொடர்ச்சியாகத் தூண்டியது. இது முதலாவதாக மேற்கைய, மத்திய பகுதிகளிலும், பின்னர் கிழக்குப் பகுதியிலும் நடைபெற்றது. சீன-இந்திய எல்லையில் இரு தரப்புத் துருப்புகளையும் ராணுவ ஜோலிகளில் ஈடுபடாது தவிர்க்க சீனு சகல வகைகளிலும் பிரயத்தனங்கள் எடுத்திருக்கிறதென்றும், அதே சமயத்தில், ராணுவ உராய்வு ஏற்படுத்துவதில் முனைந்திருந்த நேரு அரசாங்கம் சீனுவின் நியாயமான யோசனைகளை திரும்பத் திரும்ப பிடிவாதத்துடன் நிராகரித்தது என்பதும் விளங்கும். இரு தரபபுத் துருப்புகளையும் ராணுவ ஜோலிகளில் ஈடுபடாது நிறுத்துவது, எல்லைப் பிரச்சினையைப் பற்றிய இரு தரப்பினரினதும் நிலைமையை பாதிக்காது. அது எல்லையில் மோதல்களை தவிர்க்கக் கூடிய மிகவும் பயனுள்ள யதார்த்த பூர்வமான வழியாகும். சீனுவும் பர்மாவும், சீனுவும் நேபாளமும் தத்தம் எல்லைப் பிரச்சினைகளுக்கு வழி மார்க்கம் காணுகையில், இரு தரப்புத் துருப்புகளும் ராணுவ ஜோலிகளில் ஈடுபடாது இருப்பதற்கு பல்வேறு மார்க்கங்களை கடைப்பிடித்ததுடன், அவை சீன-நேபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிய எல்லைப் பிரச்சினைகளை சமாதானமாக நேசபூர்வமாக தீர்ப்பதற்கு உதவியாய் இருந்தன. சீன-பர்மிய, சீன நேபாளிய எல்லைகளில் அனுஷ்டிக்கப்பட்ட இம்முறை சீன-இந்திய எல்லையில் ஏன் அனுஷ்டிக்கப்பட முடியாது? ஏன் சீனவின் யோசனைகளை நேரு அரசாங்கம் பிடிவாதத்துடன் நிராகரிக்க வேண்டும்? ராணுவ உராய்வு ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்று ஏன் நேரு அரசாங்கம் வலியுறுத்த வேண்டும்? தன் இறுதி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நேரு அரசாங்கம் எச்சமயத்திலும் ராணுவ மோதல்களை தூண்டி விட முயற்சிக்கிறது என்பதை இதை ருஜு படுத்தவில்லையா?

தன் நிலவிஸ்தரிப்புக் கொள்கையை சீனவுக்குள் முன்னெடுத்துச் செல்லும் அதே வேளையில், சீன எதிர்ப்பு இயக்கத்தை பரப்புவதற்கும் எல்லைப் பிரச்சினையை நேரு தொடர்ச்சியாக உபயோகித்திருக்கிருர். ஒரு மேலெழுந்தவாரியான கணிப்பின்படி கடந்த மூன்று வருட காலத்துக்குள், பல்வேறு சந்தர்ப்பங்களில் சீன – இந்திய எல்லைப் பிரச்சினைப் பற்றி முன்னூறுக்கு மேற்பட்ட சொற்பொழிவுகளை நேரு நிகழ்த்தியிருக்கிருர். அவர், சீனவைத் தாக்குவதிலும் தூஷிப்பதிலும் மட்டரசமான துவேஷப் பாஷையை பிரயோகித்திருக்கிருர். "இந்திய மண்ணுக்குள் சீன ஊடுருவல்", "தெளிவான திட்டவட்டமான ஆக்கிரமிப்பு" "ஆக்கிரமிப்புக்கு மேல் ஆக்கிரமிப்பு", "இந்தியாவின் செலவில் நில விஸ்தரிப்பு", "பக்குவமற்ற, பலாத்கார முறையில் அதனுடைய பலத்தைக் காட்ட முயற்சிக்கிறது"? "எம் மார்பு மேல் காலை வைக்கிறது" என்றும், "ஏகாதிபத்தியவாதி", "நில விஸ்தரிப்புவாதி", "ஆக்கிரமிப்புவாதி" என்றெல்லாம் சீனவை நேரு அழைத்திருக்கிருர்.

எல்லைப் பிரச்சினை சம்பந்தமாக சீன மீது அவர் வசைபுராணம் பாடியிருப்பதுடன், எல்லைப் பிரச்சினையை விட பரந்துவிரிந்த விஷயங்களில் சீனமீது நேரு தாக்குதல் தொடுத்திருக்கிருர். சீனவுக்கும் இதர நாடுகளுக்குமிடையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளவு ஏற்படுத்த கீழ்த்தரமானதும் குரூரமானதுமான முறையில் முயற்சிகள் எடுத்திருக்கிறார்.

நேரு விடுத்த பின்வரும் அறிக்கைகளைப் பாருங்கள்:

''ஒரு பலம் வாய்ந்த சீனா பொதுவாக நிலவிஸ்தரிப்பு வெறிபிடித்த சீனாவாகும். சரித்திர காலம் பூராவும் அதுவே நிலைமை''.(சீனாவின்)ஜனத்தொகை உலகின் எட்பாகத்தின் ஜனத்தொகையையும் விடபிரமாண்டமானது. பொதுவாக அதன் பெருக்க வேகம், உலகின் எப்பாகத்தினதையும் விட துரிதமானது. வருங்காலத்தில் (சீனாவின்) ஜனத்தொகைப் பிரச்சினை மிகப் புதினமான, மிக அபாயகரமானதொரு நிலைமையை இந்தியா சம்பந்தமாக மாத்திரமல்ல, இந்தியாவுக்கும் உருவாக்கக்கூடும்''. (*1959*, நவம்பர் *27*)

''நாம் அவர்களுடன் நூற்றுக்கு நூறு வீதம் நேசமாய் இருந்தாலும், மாபெரும் வல்லமை பொருந்திய அரசு ஒன்று எம எல்லையில் குந்திக் கொண்டிருக்கிறது என்பது உண்மை. அது மாத்திரமே முழு சூழ்நிலையையும், முழு வடிவத்தையும் மாற்றுவதுடன்.........அங்கே நாம் ஒருவரையொருவர் எதிர்நோக்கி நிற்கின்றோம். இன்று நாளை மாத்திரமல்ல, நூறு பல நூற்றாண்டுகளாக நாம் ஒருவரையொருவர் எதிர்நோக்கி நிற்கப் போகின்றோம்''. (*1959*, டிசம்பர் *9*)

''அடிப்படையில், எப்பொழுதெல்லாம் சீனா பலம் வாய்ந்த நாடாகவிருந்ததோ, அப்பொழுதெல்லாம் அது நிலவிஸ்தரிப்பில் ஈடுபட்டிருக்கிறது. ஆனால், சீனாவுக்குள் இன்று ராணுவ தொழில் உற்பத்தித் துறைகளில் ஏற்பட்டுள்ள துரித வளர்ச்சியினாலும் உத்வேகம் ஏற்பட்டிருக்கிறது.'' (*1959*, டிசம்பர் *12*)

''சீனாவின் தொழில் உற்பத்தியிலும், ஜனத் தொகையிலும் ஏற்பட்டுள்ள துரித வளர்ச்சியினால், ஒரு பிரமாண்டமான குமுறிவெடிக்கக் கூடிய உச்ச பட்ச கட்டம் உருவாகி வருகிறது.'' (*1960*, மே *2*)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தற்சமயம் சீனு மோசமான அறுவடைகளால் பாதிக்கப்பட்டுள்ளது. சீனுவின் பெருகி வரும் ஜனத்தொகையை வைத்துப் பார்க்கும் போது, இது மிக பயங்கரமான விஷயமாகும். .........அறுவடையில் தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ள மோசமான நிலைமை பயங்கரமான நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.'' (1962, மே 2)

இவ்வறிக்கைகளை வெளியிட்டதில் நேருவின் நோக்கம் என்ன? அதன் தாத்பரியம் பின்வருமாறு:

1. சீனு ஒரு பலம் வாய்ந்த நாடாய் வளர்ச்சி பெறுமல் விடுதலைக்கு முன்னர் எப்படி ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, உத்தியோக முதலாளித்துவ ஆட்சியின் கீழ், உள்நாட்டு வெளிநாட்டுத் தொல்லைகளால் அலைக்கழிந்து நிலைக்குலைந்த மக்களைக் கொண்ட நலிவுற்ற நாடாக இருந்ததோ அப்படியே இருக்க வேண்டும்.

2. சீனு தொழில் - உற்பத்தியில் துரிதமான அபிவிருத்தியடையாது, பின்தங்கிய, விவசாய நாடாக தொடர்ந்தும் இருந்து வரவேண்டும்.

3. சீனுவை, ஆக்கிரமிப்பும் அமெரிக்க ஏகாதிபத்திய யுத்த மிரட்டலும் எதிர்நோக்கி நின்ற போதிலும், சீனு தன் தேசிய பாதுகாப்பை ஸ்திரப்படுத்திக்கொள்ள போதிய ராணுவ பலத்தை பெற்றிருக்கக் கூடாது.

4. சீனு பெரும் ஜனத்தொகையை பெற்றிருக்கக் கூடாது; அதை விட, அதன் தொகை பெருகக் கூடாது.

5. சீனு, தன் உற்பத்தித் தொழிலை துரிதமாக அபிவிருத்தி செய்தால் அது ''குமுறி வெடிக்கக் கூடிய பயங்கரமான நிலைமை''யை உருவாக்கும். சீனு, மோசமான அறுவடையால் பாதிக்கப்பட்டால், அதுவும் ''குமுறி வெடிக்கக்கூடிய பயங்கரமான நிலைமை''யை உருவாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சீனு இந்தியாவின் அண்டைநாடாக இருக்கக் கூடாது. அது தன் பூகோள திசையை நிலைமையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

சுருக்கமாக கூறப்போனல் – நேருவுக்குத் தோன்றுவது போல் - சீனு மறைந்தால் அல்லது இடம் பெயர்ந்தால் ஒழிய, சீனுவும் இந்தியாவும் "இன்று நாளை மாத்திரமல்ல ஆனல் நூறு பல நூற்ருண்டுகளாக கோபாவேசத்துடன் ஒருவரையொருவர் எதிர்நோக்குவது" நிச்சயம்.

நேரு யாருடைய ஊதுகுரல்? என்ற கேள்வியைநாம் எழுப்ப விரும்புகிருேம். அவர் இந்திய மக்களின் குரலா? இல்லவே இல்லை. இந்திய தொழிலாளர்களையும், விவசாயிகளையும், அரசியல் உணர்வு பெற்ற புத்திஜீவிகளையும், ஒடுக்கப் பட்ட தேசிய பூர்ஷுவா சக்திகளையும், விரிந்து பரந்த போக்கில் பொது வாழ்க்கையில் ஈடுபடும் ஆண் பெண் பிரமுகர்களையும் உள்ளடங்கிய இந்திய மக்கள், அதாவது, பெருவாரியான இந்தியர்கள், எப்படி மக்களை நாட்டின் எஜமானர்களாகக் கொண்ட பலமும் செழிப்பும் உற்பத்தித் தொழில் விருத்தியும் ஜனச்செறிவும் பெற்ற சீனுவை அண்டை நாடாக பெற விரும்புகிருர்களோ, அதே போல் மக்களை நாட்டின் எஜமானர்களாகக்கொண்ட பலமும், செழிப்பும்,உற்பத்தித் தொழில் விருத்தியும்,ஜனச்செறிவும் பெற்ற இந்தியாவை அண்டை நாடாக பெற சீன மக்கள் விரும்புகிருர்கள்.

பரிபூரண விமோசனமடைந்துள்ள சீன ம்க்கள், சோஷலிஸ நிர்மாணம் என்ற பெருவழியில் கால்வைத்து விட்டார்கள். சோஷலிஸ சீனு என்றென்றும் சமாதானத்தை விரும்பும் நாடாகவே இருக்கும். சுரண்டலினதும் மனிதனை மனிதன் அடக்கி ஒடுக்குவதினதும் சமுதாய வேர்களை எம் தாயகத்தில் களைந்தெறிந்த நாம், வெளிநாடு மீது படையெடுப்போம்? மற்றவர்களை சூறையாடுவோம் என்பது எப்படி சாத்தியமாகும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்முடைய உற்பத்தித் தொழில் விருத்தி மக்களின் நல்வாழ்வுக்கு அர்ப்பணிக்கப்பட்ட சோஷலிஸ உற்பத்தித் தொழில் விருத்தி முறையாகும். அத்துடன், எம்மிடம் அளப்பரிய இயற்கைச் செல்வமும், உலகின் மிகப்பெரிய உள்நாட்டுச் சந்தையும் உண்டு. அப்படியிருக்க, எம் உற்பத்தித் தொழில் விருத்தி எப்படி நிலவிஸ்தரிப்புக்கான 'உத்வேகத்தை" திருகிவிடும்?

தர்ம லட்சியத்துக்கு அர்ப்பணிக்கப்பட்டதும், ஆக்கிரமிப்பு யுத்தங்களை பாதகமாக கருதுவதுமான எம்முடைய ராணுவம் ஒரு மக்கள் ராணுவமாகும். அது மக்கள் நலன்களை பாதுகாப்பதையும் தேசீய பாதுகாப்பை ஸ்திரப்படுத்துவதையும் நோக்காகக் கொண்டது. இந்த ராணுவம் மற்ற நாடுகள் மீது படையெடுக்கும் என்பது எப்படி சாத்தியமாகும்.

சீனு பெருவாரியான ஜனத்தொகையைக் கொண்ட நாடு என்பது வாஸ்தவம். ஆனால், இது ஏன் இந்தியாவுக்கு பயமுறுத்தலாக அமைய வேண்டும். மக்கள் புரட்சியின் மான்புமிக்க வெற்றியின் பிரதிபலனுய் சீனுவின் சமுதாய உற்பத்திச் சக்திகள் பரிபூரண விமோசனம் பெற்றிருப்பதால், ஜனப்பெருக்கம் என்றழைக்கப்படும் பிரச்சினையை தீர்த்துக் கட்டுவதுடன், உற்பத்தியை பெருமளவில் விருத்தி செய்து எம மக்களின் வாழ்க்கைத் தரத்தை படிப்படியாக உயர்தத முடியும். "ஜனபபெருக்கம்" என்னும் பிரச்சினை சோஷலிஸ அமைப்பின் கீழ் நடமாட முடியாது. ஆனல் "ஜனப்பெருக்கப் பிரச்சினை" என்ற பேச்சு கிளம்புவதாய் இருந்தால், உலகிலேயே மிகப் பிரமாண்டமான ஜனத்தொகையை கொண்ட நாடுகளில் ஒன்ருக இந்தியாவும் அமையும். மேலும், சீனுவின் ஜனச் செறிவு பிரதியொரு சதுர கிலோமீட்டருக்கும் 67 ஆக இருக்க, இந்தியாவில் 148 ஆகும்; அதாவது சீனுவை விட இரண்டு மடங்கு. உம்முடைய தர்க்க வாதத்தின் படி, இந்தியாவின் பிரமாண்டமான ஜனத்தொகையும் இதர நாடுகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயமுறுத்தலாக அமைந்துள்ளதா? என்று திரு. நேருவிடம் பிரச்சினை எழுப்ப விரும்புகிறோம்.

சரித்திர ரீதியாக சீனு பலம்வாய்ந்த நாடாகவும் இதர நாடுகள் மீது படையெடுத்ததாகவும் இருந்தது வாஸ்தவம். ஆனால் அது நிலபிரபுத்துவ நிலச்சுவான்தார் வர்க்கத்தின் ஆட்சிப் பிடிப்பில் இருந்த போது சம்பவித்த விஷயம். இன்றைய சீனு மக்கள் சீனுவாகும்; சோஷலிஸ சீனுவாகும். அத்துடன் அதன் சமுதாய அமைப்பும், உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளும் அடிப்படையில் வேறுபட்டவையாகும் பலமும் செழிப்பும் பெற்ற சோஷலிஸ சீனு சமாதானத்துக்கு பயனுள்ளதாகவும், ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடும் திராணியுள்ளதாகவும் இருக்க முடியும். அதன் அண்டை நாடுகளுக்கு பக்கபலமாகவும் சர்வதேச நட்புறவுக்கு உற்ற துணையாகவும் இருக்க முடியும். இயல்பாகவே ஆக்கிரமிப்புத் தன்மை வாய்ந்த ஏகாதிபத்தியவாதிகளுக்கும், அவர்களுடைய அடிவருடிகளுக்கும் மாத்திரமே அது தடையாக, பிரதிகூலமாக இருக்க முடியும். உலகம் பூராவுமுள்ள சமாதான பிரேமிகளும், நியாயத்தை உயர்த்திப் பிடிப்போரும் இக்கருத்துடையவர்களாய் இருப்பதுடன்சோஷலிஸ சீனு எவ்வளவு பராக்கிரமும் செழிப்புமுடையதாக இருக்கிறதோ அவ்வளவுக்கு நல்லது என்று நம்புகிறார்கள். பராக்கிரமும் செழிப்பு முள்ள சோஷலிஸ சீனவை நேரு பிரமாதமாக வெறுக்கிறார். அவருடைய நிலைமை என்ன? ஏகாதிபத்திய அடிவருடியின் அந்தஸ்தில் தன்னை அவர் நிறுத்திக்கொள்ள வில்லையா?

சீனு, சமாதான வெளிநாட்டுக் கொள்கையையும், வேறுபட்ட சமுதாய அமைப்பைப் பெற்ற நாடுகளுடன் பஞ்சசீலக் கொள்கையின் அடிப்படையில் சமாதான சகஜீவனத்தையும், எப்பொழுதுமே பின்பற்றி வந்திருக்கிறது. எமன், பர்மா, நேபாளம், ஆப்கனிஸ்தான், கினி, கம்போடியா, இந்தோனேஷியா, கானு ஆதிய நாடுகளுடன், நட்புறவு - பரஸ்பர அனுக்கிரமிப்பு ஒப்பந்தங்களையும், சமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான - நட்புறவு ஒப்பந்தங்களையும் சீனு கைச்சாத்திட்டிருக்கிறது. ஆனுல், இதற்கு நேர் எதிராக, இந்தியா சீனுவோடு நட்புறவுடன் வாழ முடியாது என்று நேரு கருதுகிரூர். இது. இந்திய மக்களின் அபிலாஷைகளுக்கும் நலன்களுக்கும் நேரெதிராக திசைதிரும்பியோடுகிறது.

அநேக அண்டை நாடுகளுடன் சீனுவுக்கு சரித்திரம் இட்டுச் சென்ற எல்லைப் பிரச்சினைகள் இருந்து வந்திருக்கின்றன. உதாரணமாக, சம்பிரதாயபூர்வமாக வரையறுக்கப்படாத நீண்ட எல்லைகள் அண்டை நாடுகளான பர்மா நேபாளம் ஆதிய நாடுகளுடனும் இருக்கிறது. ஆனுல், சீன-பர்மீய அரசாங்கங்களுக்கிடையேயும், சீன-நேபாள அரசாங்கங்களுக்கிடையேயும், பஞ்சசீல சமாதான சகஜீவன கொள்கைகளினடிப்படையில், பரஸ்பர நம்பிக்கை, விட்டுக்கொடுத்தல், கலந்தாலோசித்தல் மூலமாக எல்லை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு சரித்திரம் இட்டுச் சென்ற சிக்கலான பிரச்சினைகள் சுமுகமாகவும் நியாயமாகவும் தீர்க்கப்பட்டுள்ளன. அப்படியானுல், சீன-இந்திய எல்லைப் பிரச்சினையை தீர்த்துக்கொள்வது ஏன் அசாத்தியமாய் இருக்கவேண்டும்? எல்லைப் பிரச்சினையை உண்மையாகவே தீர்த்துக்கொள்வதுதான் நேருவின் நோக்கமாய் இருந்தால், அது கடினமான விஷயமாய் இருந்திருக்கமுடியாது. அது தற்சமயம் தீர்க்கப்படாதிருந்தாலுங்கூட, அது இரு நாடுகளும் எல்லையில் நிலைக்கும் நிலைமையை வைத்துக்கொள்ளவும், சமாதானமாக ஜீவிக்கவும் தடையாக இருக்கக்கூடாது. சீனுவை தூஷிக்கவும் தாக்கவும் அத்துடன் சீனுவுடன் மோதிக்கொள்ளவும் என்னதான் காரணம் இருக்கமுடியுமோ?

நீண்ட நெடுங்காலமாக சீன-இந்திய எல்லைப் பிரச்சினையை தீர்த்துக்கொள்ள மறுக்கவும், தொடர்ச்சியாக நெருக்கடியை உக்கிரப்படுத்தவும் நேருவுக்கு அந்தரங்க நோக்கங்கள் உண்டு. இதை கிரஹித்துக்கொள்ள, நேரு பிரதிநிதித்துவப் படுத்துவதும், ஏகாதிபத்தியவாதிகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலன்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதுமான இந்திய பெரும் பூர்ஷுவாக்களினதும் பெரும் நிலபிரபுக்களினதும் வர்க்கத் தன்மையை பரிசீலனை செய்யவேண்டும்; நேருவால் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் இந்திய பிற்போக்கு ஆளும் வட்டாரங்களின் உள்நாட்டு, சர்வதேச அரசியல் தேவைகளை பரிசீலனை செய்யவேண்டும்; இந்தியாவுக்குளுள்ள, சர்வதேச சம்பந்தமான உறவு முறைகள் இரண்டினதும் பின்னணியையும் விரிவாக பரிசீலனை செய்யவேண்டும்.

## II

இந்தியா சுதந்திரமடைவதற்கு முன், இந்திய சமூக அமைப்பு கலோனியல் நிலப்பிரபுத்துவ அமைப்பாக இருந்ததென்பதை யாவரும் அறிவர். இந்திய மக்களை அன்று எதிர்நோக்கி நின்ற மகத்தான பணி, ஏகாதிபத்தியத்துக்கும் நிலபிரபுத்துவத்துக்கும் எதிராக தேசீய ஜனநாயக புரட்சியை வழிநடாத்திச் செல்வதுதான். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய கலோனியல் ஆட்சி முறையை பூரணமாக கவிழ்ந்தெறிவதற்காகவும் உண்மையான சுதந்திரத்திற்காகவும், தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நீண்ட வீரஞ்செறிந்த போராட்டத்தை பெரும் இந்திய மக்கள் நடத்தினர். இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பிறகு, ஆசிய ஆப்பிரிக்க நாட்டு மக்களின் தேசீய விடுதலை இயக்கங்கள் முன்னென்றும் கண்டிராத அளவு உச்ச நிலையை அடைந்ததுடன் இந்திய மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் துரிதமாக முன்னேறியது. என்றுமே சீன மக்கள் இந்திய மக்களுக்கு அவர்களது தேசீய விடுதலைப் போராட்டத்தில் ஆழ்ந்த அனுதாபம் காட்டியதோடு இந்திய மக்களை மிக உயர்வாக மதித்து வந்துள்ளனர்.

இந்திய பூர்ஷுவா வர்க்கம் பிரிட்டிஷ் பூர்ஷுவா வர்க்கத்தோடும் இந்திய நிலபிரபுத்துவ வர்க்கத்தோடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்த பந்தம் கொண்டது. ஆனால், அதன் சொந்த வர்க்க நலனுக்காக வேண்டி இந்திய மக்களின் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தில் பல்வேறு கட்டங்களில் வெவ்வேறு முறைகளில் கலந்துகொண்டது. எப்படியிருப்பினும், அதன் பொருளாதார நிலையினால் நிர்ணயிக்கப்பட்டு ஆரம்பத்திலிருந்தே அது பிரிட்டிஷ் ஏகாதிபத்திய–எதிர்ப்பில் பலமான சமரஸ போக்கை கொண்டிருந்தது இந்திய பூர்ஷுவா வர்க்கம், ஒருபுறம் பிரிட்டிஷ் கலோனியல் ஆட்சிக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கத்தை தொடர்ந்து நடத்தி வந்தது; மறுபுறமோ, மக்களின் போராட்டத்தைத் தளர்த்தி ஸ்தம்பிக்கச் செய்யவும், அவர்களின் புரட்சி இயக்கத்தைக் கட்டுப்படுத்தவும் பலவீனப்படுத்தவும் வேண்டி "அஹிம்சை" என்னும் கோஷத்தை பிரயோகித்தது.

இந்திய பூர்ஷுவா வர்க்கத்தின் இந்த குணம்சத்தை நேருவே தன் "சுயசரிதை"யில் வெளிப்படுத்தியுள்ளார். இந்திய தேசீய இயக்கம் விழைவது "சமூக அமைப்பில் மாற்றம் அல்ல; ஆனால் அரசியல் சுதந்திரம்............தலைவர்கள் நில முறையையோ முதலாளித்துவ அமைப்பையோ கலைக்க எத்தணிக்கவில்லை என்ற காரணத்தால் அவர்கள் வெகுஜனங்களுக்கு துரோகம் செய்கிறார்கள் என்று கூறுவது மடைத்தனம். அவர்கள் அப்படி எத்தணித்ததாக பாத்தியதை கொண்டாடியது கிடையாது (பக்கங்கள் 366—367, பொட்லிஹெட், லண்டன், 1949.)

தேசீய சுதந்திரத்திற்கான இந்திய மக்களின் இயக்கத்தின்போது பிரிட்டிஷ் கலோனியல்வாதிகள் இந்தியாவின் பெரும் பூர்ஷுவாக்களுடனும் பெரும் நிலபிரபுக்களுடனும் சமரஸம் செய்துகொண்டதுடன், பிரிட்டிஷ் கலோனியல்வாதிகளின் பொருளாதார நலன்கள் அடிப்படையாக பாதிக்காது பாதுகாக்கப்படும் நிபந்தனையின் மீது பின் கூறப்பட்டவர்களிடம் அவர்களுடைய ஆட்சியை ஒப்படைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பிரிட்டிஷ் எதிர்ப்புப் போராட்டத்தில் இந்திய மக்களால் வென்றெடுக்கப்பட்ட கனிகள் இந்தியாவின் பெரும்பூர்ஷுவாக்களாலும் பெரும் நிலபிரபுக்களாலும் கபளீகரம் செய்யப்பட்டன.

இந்தியா சுதந்திரப் ப்ரகடனஞ் செய்ததன் பின், இந்திய தேசீய பூர்ஷுவாக்களின் நலன்களை ஓரளவுக்கு ஒருபோது பிரதிநிதித்துவப்படுத்திய நேரு, நாட்டின் உள்ளும் வெளியிலும் வர்க்கப் போராட்டம் வளர்ச்சிபெறத் தொடங்கியதும், காலப்போக்கில் இந்தியாவின் பெரும் பூர்ஷுவாக்களினதும் பெரும் நிலப்பிரபுக்களினதும் நம்பிக்கைக்குப் பாத்திரமான பிரதிநிதியாக மாறினர். நேரு அரசாங்கம், ஏகாதிபத்திய-எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ-எதிர்ப்புப் சியின் இடத்தில் பிற்போக்கு தேசீயவாதத்தைவைத் துக்புரட்கொண்டதுடன் ஏகாதிபத்திய நிலப்புரபுத்துவ சக்திகளோடு என்றுமில்லாதவாறு மேலும் நெருங்கிய உறவு கொண்டாடியது. நலன்களின் பூரண உடன்பாடு இல்லாத இந்திய பெரும் பூர்ஷுவா பெரும் நிலப்பிரபுத்துவ வர்க்கங்களுக்கும், வெளிநாட்டு ஏகபோக மூலதனத்துக்கும் இடையில் உள்ள சில முரண்பாடுகள் ஏதோ இருக்கத்தான் செய்கின்றன. எனவே, இந்திய தேசீய இனத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையே உள்ள முரண்பாடுகள் கூர்மையடைந்தபோது, நேரு அரசாங்கம் வெகுஜனங்களின் உந்துதல் சக்தியின் பலவந்தத்தினல், ஏகாதிபத்தியத்திலிருந்து ஓரளவு வேறுபாடு காட்டியது. ஆனல் இந்திய பெரும் பூர்ஷுவாக்களினதும், பெரும் நிலப்பிரபுக்களினதும் வர்க்க அமைப்பும் பொருளாதார அந்தஸ்தும் நேரு அரசாங்கம் மேலும்மேலும் ஏகாதிபத்தியத்தை நம்பியிருப்பதையும் ஏகாதிபத்தியத்திற்கு தொண்டு புரிவதையும் நிர்ணயிக்கின்றன.

இந்தியா தனது சுதந்திரப் பிரகடனத்தின் பின்னர் பொருளாதாரச் சுதந்திரம் பெறவில்லை. ஏகாதிபத்தியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பொருளாதார செல்வாக்கை இன்னும் தன் வசத்தில் வைத்திருந்தது. நாட்டின் பொருளாதாரத்தின் ஜீவ கிளைகளை அந்நிய மூலதனம் இன்னும் கட்டுப்படுத்தி வந்தது. இந்திய யந்திரிசபையின் காரியாலயம் 1951-ல் இந்தியப் பிரதமருக்கு சமர்ப்பித்த புள்ளி விபரங்களின்படி இந்திய பெட்ரோல் உற்பத்தித் தொழில் 97%, ரப்பர் உற்பத்தித் தொழில் 93% தீக்குச்சி உற்பத்தித் தொழில் 90%, சணல் உற்பத்தித் தொழில் 89%, தேயிலை பக்குவப்படுத்தும் உற்பத்தித் தொழில் 86%, நிலக்கரி உற்பத்தித் தொழில் 62% அந்நிய மூலதனத்தின் கட்டுப்பாட்டில் இருந்தன. இந்தியாவின் தேசீய உற்பத்தித் தொழில் என்று கூறப்படும் பருத்தி நெசவு உற்பத்தித் தொழில்கூட 21% அந்நிய அந்நிய மூலதனத்தின் கட்டுப்பாட்டிலிருந்தது. சுதந்திரத்தின் ஆரம்ப நாட்களில் பிரிட்டிஷ் மூலதனத்தில் நடந்துவந்த தொழிற்துறைகள்சிலவற்றை பெருவாரியான தொகைகள் நஷ்டஈடு கொடுத்துஇந்திய அரசாங்கம், தேசீயமயமாக்கிய போதுங்கூட ஏகாதிபத்தியத்தின் அடிப்படை நலன்கள் மீது இந்தியாவில் கைவைக்கப்படவில்லை.

சமீப வருடங்களில், இந்தியாவில் அந்நிய முதலீடு துரிதமாக அதிகரித்துள்ளது. ஜூன் 1948-ல் இந்தியாவின் தொழிற்துறைகளில் அந்நிய முதலீடுகளின் மொத்தம் (வங்கி முதலீடுகளைக் கணக்கிலெடுக்காமல்) 256 கோடி ரூபாவாகும். 1960-ல் இந்தத் தொகை 655 கோடி ரூபாவாக உயர்ந்தது. அதாவது பதின்மூன்று வருடங்களில் 150% கூடியுள்ளது. 1948-ல் அந்நிய முதலீடு, இந்தியக் கூட்டு-இருப்பு கம்பனிகளின் கட்டப்பட்ட தொகையில் 34.8% ஆகும். 1960-ல் இந்தத் தொகை 38% க்கு உயர்ந்தது. அதே வேளையில் இந்திய ஏகபோக மூலதனத்தினதும் அந்நிய மூலதனத்தினதும் கூட்டுச் சொந்தமான தொழில் நிறுவனங்கள், உண்மையில் பின்னதின் கட்டுப்பாட்டில் வேகமாக வளர்ந்துவிட்டன. "இந்தியன் பொருளாதார டைம்ஸ்" சஞ்சிகையில் 1962 ஜூலை 23-ல் பிரசுர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான செய்தியின் பிரகாரம் இத்தகைய கூட்டுச் சொந்தமான தொழில் நிறுவனங்கள் 1958-ல் 103 ஆகவும், 1959-ல் 150 ஆகவும், 1960-ல் 380 ஆகவும்,1961-ம் 403 ஆகவும் கூடியுள்ளன. 1962 மார்ச் வாக்கில் இத்தகைய கூட்டுச் சொந்தமான தொழில் நிறுவனங்கள் 1,240 ஆக மாறியுள்ளன. அமெரிக்க மூலதனத்தின் தொகைதான் மிகத் துரிதமாக வளர்ந்துள்ளது. 1948-ல் இருந்து 1959 வரை இந்தியாவில் பிரிட்டிஷ் முதலீடு இரட்டிப்பு அடைந்துள்ளது. ஆனால் அமெரிக்க முதலீடு ஏழு மடங்கு பெருகியுள்ளது. 1960-61 வரை பிரிட்டனிலிருந்து வரும் இந்தியாவின் இறக்குமதி, விகிதாசாரப்படி 22.8ல் இருந்து 19.8 ஆகக் குறைந்துள்ளது. அதே சமயத்தில் அமெரிக்காவின் பங்கு 16-ல் இருந்து 27% ஆக அதிகரித்து (அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகும் தானியங்களை சேர்க்காமல்) பிரிட்டனை மீறிவிட்டது.

விசேஷமாக அவதானிக்க வேண்டிய உண்மையாதென்றால், நேரு அரசாங்கம் வெளிநாட்டு உதவியை மேலும் மேலும் நம்பியிருக்க வேண்டி நேர்ந்துள்ளது. முதல் "ஐந்தாண்டு திட்ட"த்தின்கீழ் இந்தியாவின் மொத்தச் செலவில் வெளிநாட்டு உதவி 9.6% ஆகும். இரண்டாம் "ஐந்தாண்டு திட்ட"த்தின் கீழ் மொத்தச் செலவில் இவ்வுதவி 20.6% ஆகும். அதன் மூன்றாவது "ஐந்தாண்டு திட்ட"த்தின்கீழ் இவ்வுதவி 30% ஆக இருக்கும். 1961 ஒக்டோபர், 1962 ஏப்ரில் மாதங்களில் வெளியான அமெரிக்க சர்வதேசக் கூட்டுறவு நிர்வாகத்தின் "வெளிநாட்டு உதவி" என்னும் வெளியீட்டின் படியும் மற்றும் அமெரிக்க உத்தியோகபூர்வமான தஸ்தாவேஜுகளின்படியும் அமெரிக்கா, இந்தியாவுக்கு 1949 க்கும் 1962 ஜூலை இறுதிக்கும் இடையில் வழங்கிய அல்லது வழங்க உறுதியளித்த "உதவி" 475.42 கோடி அமெரிக்க டாலராகும். இதே காலகட்டத்தில் அமெரிக்காவின் கட்டுப்பாட்டிலிருந்த சர்வதேச நிதி நிறுவனங்களிலிருந்து இந்தியாவுக்கு வழங்கிய 'உதவி'யையும் இதனுடன் சேர்த்தால் மொத்தப் பெருந்தொகை 659 82 கோடி அமெரிக்க டாலரையடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசாங்கம் பெறும் பேரளவு வெளிநாட்டு உதவியின் பெருவாரிப்பகுதி வட்டியுடன் திருப்பிக்கட்ட வேண்டியதாகவும், வட்டி விகிதம் 6 சத விகிதம் வரை உயர்ந்ததாகவும் உள்ளது. இதன் பிரதிபலனாக, இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் மென்மேலும் பளுவடைந்து வருவதுடன் வெளிநாட்டு மூலதனத்திலிருந்து தனது பொருளாதாரத் தாங்குதலைத் தவிர்த்துக்கொள்வதற்கு, இந்தியாவுக்கு மென் மேலும் கஷ்டமாகிவருகிறது. "........ வெளிநாட்டுக் கடன் உதவிகள் சுயேச்சையான இயக்கத்தின் பால் இந்தியா முன்னேறுவதற்கு உதவுவதற்குப் பதிலாக வெகு நீண்ட காலத்துக்கு நாட்டின் கழுத்தைச் சுற்றிய பாராங்கல்லாய் தடையாகவே இருந்து வரும்." என்று இந்திய வாரப் பத்திரிகையான "லின்க்" 1962 ஆகஸ்ட் 15-ல் எழுதியது.

ஏகாதிபத்தியத்தின் தாங்கலில் இருந்து இந்தியா தன்னை பொருளாதார ரீதியாக விடுவித்துக்கொள்ள வில்லை என்பதுதான் இதனைல் ருஜுவாகும் உண்மை. சென்ற காலத்துக்கும் இப்போதைக்கும் இடையில் ஏற்பட்டுள்ள வேறுபாடு என்னவென்றால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஏகபோக ஸ்தானத்தை அமெரிக்க ஏகாதிபத்தியம் படிப்படியாக ஸ்வீகரித்து வருகிறது.

நேரு அரசாங்கம், அரசாங்கத்தால் நடத்தப்படும் பல தொழில் துறைகளை இந்தியாவில் ஸ்தாபித்துள்ளது. இது உண்மையில் வெளிநாட்டு மூலதனத்தின் தாங்குதலில் இந்தியப் பெரும் பூர்ஷுவாக்களாலும், நிலபிரபுக்களாலும் ஆதிக்கம் செலுத்தப்பட்டுவரும் அரசாங்க முதலாளித்துவ தொழில் நிறுவனமேயன்றி வேறல்ல. இத்தகைய தொழில் நிறுவனங்கள் இந்தியபெரும்பூர்ஷுவாக்களினதும் பெரும் நிலப்பிரபுக்களினதும், வெளிநாட்டு ஏகபோக மூலதனத்தினதும் நலன்களையே பாதுகாக்குகின்றன. அவை, சாராம்சத்தில் இந்திய உத்தியோக வர்க்க ஏகபோக மூலதனமாகும். இந்த உத்தியோக வர்க்க ஏகபோக மூலதனம் விருத்தியடைந்து வருகிறது. இது இந்திய தொழிலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களினதும் சிறிய நடுத்தர நிறுவனங்களின் முதலாளிக ளினதும் செலவில் வளர்ந்து வருகிறது.

தனது "தொழில் புரட்சி"யை நடத்தி செல்வதற்காக, இந்திய மக்களை, "அவர்களது அறைப்பட்டிகளை இறுக்கிக் கொள்ளுமாறு" 1960–ல் நேரு பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்தார். இந்தியத் தொழிலாளி மக்களின் வாழ்க்கைத் தரம் சமீப வருடங்களில் மிகவும் க்ஷீணித்து வந்திருக்கிறது விலைவாசிகள் தொடர்ந்து மலைபோல் உயர்ந்திருக்கின்றன; வரிப்பளு அதிகரிக்கிறது. வேலையில்லாதோர் தொகை என்றுமில்லாதவாறு பெருகியுள்ளது; விவசாயிகளினது வாழ்க்கை அதிக கடினமாகிவிட்டது.

இந்தியாவின் அடிப்படையான உள்நாட்டுப் பிரச்சினை விவசாயிகளது பிரச்சினையேயாகும்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் இந்தியாவை ஆண்ட போது தமது கொள்ளைச் சுரண்டல் நலன்களைப் பாதுகாப்பதற்காக, நிலப்பிரபுத்துவ வர்க்கத்தை ஆதரித்தார்கள். பெரும்பான்மையான விவசாய மக்கள் குத்தகை, வரி, வட்டிக்கடன் போன்ற சகலவிதமான சுரண்டலுக்கும் ஆளாகி வந்தனர். விவசாய உற்பத்தி மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்தது.

இந்தியா சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்ட ஆரம்ப தசையில் நேரு அரசாங்கம், பெரும் பூர்ஷுவாக்களினதும், பெம்ரு நிலப்பிரபுக்களினதும் தேவைகளை நிறைவேற்றுவ தற்காகவும் அவர்கள் கையில் அதிகாரத்தை குவித்துவைப் பதற்காகவும் வேண்டி சில சாதாரண குறுநில இளவரசர்க ளின் அரசியல் உரிமைகளையும், சில நிலப்பிரபுக்களினது ஜமீன்தாரி (வரிக்குத்தகை) உரிமைகளையும் ஒழித்துக் கட்டினர். ஆனால் நிலப்பிரபுத்துவப் பண்ணை முறை பொதுவானமுறையில் பாதுகாக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1958-ல் இந்திய நிதியமைச்சு வெளியிட்ட 1954—1955-ம் வருடங்களின் தேசிய "மாதிரி அளவெடுப்பு"ப் பிரகாரம் இந்தியாவில் நில விநியோகம் பின்வருமாறு அமைந்துள்ளது: விவசாய மக்களின் முழுத்தொகையில் 75 சத விகிதமான ஏழை விவசாயிகளும், பண்ணைத் தொழிலாளிகளும் விவசாயம் செய்யப்பட்ட எல்லா நிலங்களிலும் 17 சத விகிதமே சொந்தமாகப் பெற்றிருந்தனர். 12.5 சத விகிதமாள கீழ்த்தர மத்தியதர விவசாயிகள் 16.5 சத விகிதம்தான் சொந்தமாகக் கொண்டிருந்தனர். 8.5 சத விகிதமான வசதிவாய்ந்த மத்தியதர விவசாயிகளுக்கும் சொந்த பண்ணைகளில் வேலை செய்யும் வசதிபடைத்த விவசாயிகளுக்கும், நிலபிரபுக்களுக்கும் 32.5 சத விகிதம் சொந்தம். அதே நேரத்தில், நிலப்பிரபுத்துவ பண்ணையாளர்களும் அதிக செல்வம் படைத்த விவசாயிகளும் உள்ளடங்கிய 4 சத விகிதமானோர் நிலத்தில் 34 சத விகிதத்தைச் சொந்தமாகக் கொண்டிருந்தனர்.

இந்தியத் தொழில் அமைச்சு வெளியிட்ட விவசாயத் தொழில் அளவெடுப்பின்படி 1951 - 1952-ல் கடன்காரர்களாயிருந்த விவசாய மக்கள், மொத்த விவசாய மக்கள் தொகையில் 44.5% ஆகும். மேலும் இது 1956-ம் 1957-ம் ஆண்டுகளில் 64 5% ஆக உயர்ந்தது. 1960-ம் வருட உத்தியோக அளவெடுப்பொன்று விவசாயிகளின் இக்கடன் தொகை 900 கோடி ரூபாவாக உயர்ந்துள்ளதைக் காட்டியது. இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்படும் "யோஜனா" என்ற வாரமிரு பத்திரிகை, நாட்டுப்புற பாட்டாளி மக்களினது — நிலமற்ற பண்ணைத் தொளிலாளர்களினது — அந்தஸ்தில் ஒருவித முன்னேற்றமும் இல்லையென்பதை 1961 அக்டோபர் முதல் தேதி இதழில் ஒட்டுக்கொண்டது. உண்மையில் ஏதேனினும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளதெனில் விலைவாசிகள் எல்லாம உயர்வதின் காரணமாக, அது மோசமான நிலைக்குச் சரியும் வளர்ச்சியாகத்தான் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காட்டிய பொருளாதார நிலைகளின் கண்ணோட்டத்தில், நேருவின் காங்கிரஸ் கட்சியின் கீர்த்தி சரிந்து வருவதோடு, விரிந்து பரந்த வெகுஜனங்களின் அதிருப்தியும், எதிர்ப்பும் நாளுக்கு நாள் வளர்கிறது. பெறும் வேலைநிறுத்தங்களும் நிலப் போராட்டங்களும் ஒன்றன் பின் ஒன்ருக வெடித்துக் கிளம்பியுள்ளன. 1957–ல் நடந்த பொதுத் தேர்தலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேரளத்தில் ஈட்டிய வெற்றி, 1958-ல் மேற்கு வங்காளத்திலும், உத்திரப் பிரதேசத்திலும் பஞ்சத்திற்கெதிராக நடந்த போராட்டம், 1959–ல் பஞ்சாப் விவசாயிகள் வரிகொடுமைக்கெதிராக நடத்திய போராட்டம், 1959-ல் மேற்கு வங்காளத்தில் 15 லட்சம் மக்கள் நடத்திய உணவுப் போராட்டம், 1960–ல் ஐந்து லட்சம் மத்திய அரசாங்க ஊழியர்கள் நடத்திய மாபெரும் வேலைநிறுத்தம், 1960–1962-ம் வருடங்களில் நாடு பூராவுமே பிரவாகித்தெழுந்த வரிப்பளு–எதிர்ப்புப் போராட்டங்கள். நிலப் போராட்டங்கள்–அவையெல்லாம் சமீப வருடங்களாக நேரு அரசாங்கத்தை எதிர்நோக்கிவரும் அரசியல் பிரச்சினைகள் ஆழமடைவதையும், இந்தியாவின் வர்க்க முரண்பாடுகளும் சமூக முரண்பாடுகளும் என்றுமில்லாதவாறு கூர்மையடைவதையும் காட்டும் முக்கியமான குறியீடுகளாகும்.

நேரு, மார்க்ஸிஸம் "காலத்துக்கு ஒவ்வாதகொள்கை" என்று அவதூறு அபாண்டம் கொட்டி வருவதோடு "சகிப்புத் தன்மை", "அஹிம்சை", "சமாதான முறைகள்" என்னும் அவருடைய தத்துவத்தை குழலூதிவருகிருர். ஆனல் இந்தியாவின் யதார்த்த நிலைமைகள் நேருவின் தத்துவங்களை சிரிப்புக்கிடமாக்குகின்றன. ஏகாதிபத்தியத்தையும், நிலப்பிரபுத்துவ சக்திகளையும் நேரு உண்மையில் சகித்துத்தான் வருகிருர். ஆனல் மக்கள் மீதும் முற்போக்கு சக்திகள் மீதும் அவர், "சகிப்புத் தன்மை"யை அனுஷ்டிக்கக் காணோம். ஆட்சிக்கு வந்தநாள் தொட்டு மக்கள் வெகுஜனங்களையும் முற்போக்கு சக்திகளையும் அடக்குவதற்காக நேரு பலாத்காரத்தைப் பிரயோகித்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளார். கம்யூனிஸத்தையும், மக்களையும், எதிர்ப்பதில் அவர் ஒரு பழைய ஆசாமியாக மாறியுள்ளார்.

இந்திய உத்தியோகபூர்வமான புள்ளி விபரங்களின் படி இந்தியா சுதந்திரமடைந்ததிலிருந்து 1950 வரையுள்ள மூன்று ஆண்டுகளில் இந்திய ராணுவத்தினரும் போலிஸாரும் சாதாரணப் பொதுமக்கள் மீது 1,982 சந்தர்ப்பங்களில் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இவற்றால் சுமார் 3,784 மக்களைக் கொன்று குவித்துள்ளனர்; 10,000 மக்களைக் காயப்படுத்தியுள்ளனர்; 50,000 பேரை சிறையில் தள்ளியுள்ளனர். கடந்த சில வருடங்களில் நேரு அரசாங்கம் பொது மக்கள் மீது பலாத்கார கொடுங்கோன்மையைப் பிரயோகித்த சம்பவங்கள் பெருவாரியாகக் கூடியுள்ளன. கேரளத்தில் கம்யூனிஸ்டுகள் தலைமையில் இயங்கிய ஆட்சியைத் தூக்கியெறிவதற்காகப் பிற்போக்கு சக்திகள் பலாத்காரத்தை பிரயோகிப்பதற்கு ஜுலை 1959-ல் நேரு பகிரங்கமாக ஊக்கமளித்தார். சாதாரண பொது ஜனங்களின் வாழ்வுரிமைப் போராட்டங்களை நசுக்குவதற்காக அவருடைய அரசாங்கம் பெருமளவு அடக்குமுறைகளை அனுஷ்டித்தது; 1959-ல் ஆகஸ்ட் செப்டம்பர் மாதங்களில் மேற்கு வங்காளத்தில் நடந்த உணவுப் போராட்டத்தில் மாத்திரம் 80 பேர் கொல்லப்பட்டனர், 3,000 பேர் காயப்படுத்தப்பட்டனர், 20,000 க்கு அதிகமானோர் சிறையில் தள்ளப்பட்டனர். 1960-ம் ஆண்டு நவம்பர் 9–ல் டில்லியில் நடந்த ராஜ்ய கவனர்களின் மகாநாட்டில் முன்னைய பதின்மூன்று வருடங்களிலும், போலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்த சம்பவங்களின் எண்ணிக்கை, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் நடந்த சம்பவங்களை விட ஏராளமானவையென இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி பிரசாத் ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்தியாவின் தேசீய சிறுபான்மை இனங்களுக்கு எதிராக நேரு அரசாங்கம் படுமோசமான அடக்குமுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பிரயோகித்துள்ளது. பல வருடங்களாக இந்திய ராணுவத்தினர், இந்தியாவின் வடகிழக்குப் பிராந்தியத்தில் நாகா ஜாதியினரில் பல்லாயிரக்கணக்கானோரைக் கொன்று குவித்தும், பல்லாயிரக்கணக்கானோரை ராணுவ முகாம்களில் சிறை வைத்தும் வந்துள்ளனர் என்று கிடைத்திருக்கும் தகவல் சுட்டிக்காட்டுகிறது. இந்திய அரசாங்கம் "இன அழிப்பு"க் கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறதென்று லண்டன் "ஒப்சர்வர்" கூட சமீபத்திய கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளது.

நேரு, "உலக சரித்திரம்" என்ற தன் நூலில் 1934-ல் பின்வருமாறு எழுதினார்; "அதிகாரம் செலுத்துவதற்கு, தொழிலாளவர்க்கத்தை அடக்கி வைப்பதற்கும் ஜனநாயக ஸ்தாபனங்களின் சாதனங்களை உபயோகிக்க முதலாளித்துவம் ஜனநாயகத்தை அனுமதிக்கிறது. இது சாத்தியமில்லாத பட்சத்தில், முதலாளித்துவம் ஜனநாயகத்தைஒதுக்கித்தள்ளிவிட்டு பாஸிஸத்தின் பகிரங்க முறையான கொடுங்கோன்மை அட்டூழியத்தையும் பயங்கரத்தையும் பிரயோகிக்கிறது" (பக்கம் 826, 4-வது பதிப்பு, லின்ட்சே டிரம்மண்ட் லிமிட்டட், லண்டன், 1949)

கால ஓட்டத்தில் இந்த வார்த்தைகள் தனது சொந்தக் கொள்கையின் வர்ணனையாகவே விளங்கும் என்பதை நேரு அன்று அறிந்திருக்கவில்லை.

இந்தியாவின் பொருளாதார அரசியல் நிலைமைகளின் கண்ணோட்டத்தில்பார்க்கையில் நேரு விளம்பரம் படுத்துவது போல், இந்தியாவில் "சோஸலிஸ பாணி சமூகம்" நிர்மாணமாகிறதென்பது வெறும் அப்பட்டமான செப்படிவித்தை இல்லையா? நேருவின் "சோஷலிஸத்தை" விமர்சிக்கையில், ஐக்கிய அமெரிக்க ஏகபோகக் கும்பலின் ஊதுகுழலான ஹரிமன் 1959 மே 4-ல் பின்வருமாறு கூறினார். "அவர்கள் (நேருவும் அவரைப் போன்றவர்களும்) இந்தபதத்தை ("சோஷலிஸம்") உபயோகிப்பது நல்லதென்றே நான் நினைக்கின்றேன். முதலாளித்துவம், ஏகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திபத்தியம் இரண்டையும் பெரும்பாலும் ஒரே அர்த்தத்தில் இனம் கண்டுகொண்ட ஆசிய மக்களின் மத்தியில் இந்தப் பதம் ("சோஷலிஸம்") மிகவும் ஜனரஞ்சகமானது. இந்தியர்கள் (நேருவும் அவரைப் போன்றவர்களும்) இந்தப் பதத்தை கம்யூனிஸ்டுகளிடமிருந்து எடுத்து விட்டனர்.'' ஹரிமன் உடைய இக்கருத்து நேருவின் ''சோஷலிஸ பாணி சமூகத்''தின் உண்மையான மதிப்பை காட்டுவதற்கு உதவுகிறது.

எந்த ஒரு நாட்டைப் பொறுத்தமட்டிலும், அதன் வெளிநாட்டுக் கொள்கை அத்தியாவசியமாக அதன் உள் நாட்டுக் கொள்கையின் தொடர்ச்சியேயாகும். தனது உள் நாட்டுக் கொள்கையைப் போல் நேரு அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையும் தன் பிற்போக்கு வர்க்கத் தன்மையை பிரதிபலிக்கிறது.

ஒரு கால கட்டத்தில், நேரு அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் உலக சமாதானத்துக்கு உதவியாயிருந்தன. அது ஏகாதிபத்திய ராணுவ முகாம்களில் சேர மறுத்தது; இந்தியாவில் ராணுவ முகாம்கள் அமைப்பதற்கான ஏகாதிபத்தியவாதிகளின் வேண்டுகோளை நிராகரித்தது; நடுநிலைமைக் கொள்கைக்குச் சார்பாகத் தன் பற்றுதலைப் பிரகடனப்படுத்தியது. சோஷலிஸ நாடுகளுடன் சேர்ந்து சமாதான சகஜீவன பஞ்சசீலக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் சீனவுடன் சேர்ந்துக் கொண்டது. முதலாவது ஆசிய – ஆபிரிக்க மகாநாட்டைக் கூட்டுவதில் நேரு அரசாங்கம் முக்கிய பாத்திரம் வகித்தது. இந்த காலகட்டத்தில் கூட நேரு ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக்கெதிராக, விசேஷமாக அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிராக, அதிகம் குரல் எழுப்பவில்லை. ஆனல் பல்வேறு நாடுகளில் மக்கள் நடத்திய நியாயமானப் போராட்டங்களுக்கெதிராக கண்டனம் முழக்கினர். மிக முக்கியமான, பிரதானமான சர்வதேசப் பிரச்சினைகளின் போதெல்லாம் நேரு எப்பொழுதும் ஏகாதிபத்தியத்தின் பக்கமே நின்று வந்துள்ளார். பிரதானமாக, "சிறிய அளவில் குறை கூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல், பேரளவில் உதவுதல்'' என்னும் கொள்கையை அனுஷ்டித்து வந்துள்ளார், உதாரணமாக கொரியா மீது அமெரிக்கா ஆக்கிரமிப்பு யுத்தம் நடத்திய போது யுத்தக் கைதிகளை அமெரிக்கா பலவந்தமாகத் தன்னிடம் வைத்திருப்பதற்கு ஆதரவாக இந்திய அரசாங்கம் 1952 நவம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு பிரேரணையைக் கொண்டு வந்தது. 1956-ல் ஹங்கேரியில் நடந்த எதிர்ப்புரட்சியின் போது, நேரு சோவியத் யூனியன் மீது வசைபாடி அவதூறு பரப்பியதுடன், ஹங்கேரியத் தொழிலாளர் விவசாயிகளின் புரட்சி அரசாங்கத்தைத் தாக்கினர். 1958-ல் அமெரிக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் லெபனுனுக்கும், ஜோர்தானுக்கும் ராணுவத்தை அனுப்பிய போது, நேரு அமெரிக்க பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவாகப் பேசியதுடன் அவர்களுடைய நடவடிக்கையை "அவர்களுடைய சொந்த நலன்களைப் பாதுகாத்தல்'' என்று கூறி சமாளித்தார். ஈராக் மக்களது பொது விரோதியான ஃபைஸாலின் சாவுக்கு "தான் துக்கப்படுவதாக''க் கூறினர். 1958-ல் தனது "அடிப்படை முனையீடு'' என்ற கட்டுரையில் நேரு சோவியத் யூனியன் பலாத்காரத்தைப் பிரயோகித்ததற்காக அவதூறு கொட்டினர். யூகோஸ்லாவிய நவீன திரிபுவாதத்தைப்பற்றிய பல்வேறுநாட்டுக் கம்யூனிஸ்டுகளின் விமர்சனத்தை "மற்றைய நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுதல்'' என தப்பர்த்தம் கற்பித்தார். ஹங்கேரிய மக்கள் நாகி துரோகி மீது மரண தண்டனையை நிறைவேற்றிய போது "உலக நெருக்கடிக்கு வழி கோலுதல்'' என்று வர்ணித்தார்.

சென்ற சில வருடங்களில் இந்தியாவின் உள்நாட்டு நிலைமையிலும் சர்வதேச நிலைமையிலும் ஏற்பட்ட மாறுதல்கள் காரணமாக நேருவின் வெளிநாட்டுக்கொள்கை மேலும் பலமாக ஏகாதிபத்தியத்தின் பக்கம் சாய்ந்துள்ளது. மக்கள் மீது அது அனுஷ்டிக்கும் அடக்குமுறையையும் சுரண்டலையும் வலுப்படுத்துவதுடன், நேரு அரசாங்கம் இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின் பொருளாதார, அரசியல் நெருக்கடிகளைச் சமாளிப்ப தற்கான பிரதான மார்க்கமென மேலும் மேலும் ஏகாதி பத்தியத்தை நம்பத் தொடங்கியது. மறுபுறத்தில் சோஷ லிஸத்தின், குறிப்பாக சீன சோஷலிஸத்தின் புரட்சியின தும் நிர்மாணத்தினதும் செல்வாக்கை எதிர்ப்பதற்காக வும், தேசிய விடுதலை இயக்கத்தைத் தடைப்படுத்துவதற் காகவும் இடைப்பட்ட பகுதியின் கட்டுப்பாட்டுக்கானத் தனது போராட்டத்திற்காகவும் அமெரிக்க ஏகாதிபத்தியம் நேரு வகிக்கும் பாத்திரத்துக்கு இப்போது மிகுந்த முக்கி யத்துவம் கொடுக்கின்றது. முதலாளித்துவத்தின் நெருக் கடி நாளுக்கு நாள் உக்கிரமடையும் அதே வேளையில், அமெ ரிக்க ஏகபோக மூலதனம் இந்தியாவை ஊடுருவ எல்லா வகையிலும் கடினமாக முயல்வதுடன் அமெரிக்காவின் ஏற்றுமதிப் பொருட்களுக்கும், முதலீட்டுக்கும் இந்தியா வை ஒரு முக்கியமான சந்தையாக்க முயல்கிறது. இதன் காரணமாக அமெரிக்கா சமீப காலங்களில் நேரு அரசாங் கத்தின் மீது தான் அனுஷ்டித்து வந்த கொள்கையில் வெளிப்படையான மாற்றத்தை ஏற்படுத்தி நேருவின் "நடு நிலைமைக்" கொள்கையின் மீது காட்டிய எதிர்ப்பிலிருந்து அதற்கு பலமான உதவியளிக்கும் கொள்கைக்கும், இந்திய பெரும் பூர்ஷுவாக்களுக்கு ஆயுத உதவியும் யந்திர நுட் பக் கல்வியும் அளிப்பதற்கு மறுத்து வந்ததிலுருந்து இந்தி யப் பெரும் பூர்ஷுவா வர்க்கத்துடன் ஒத்துழைத்து அதனு டன் சேர்ந்து இந்திய மக்கள் மீது கூட்டுச் சுரண்டல் நடத் தும் கொள்கைக்கும் மாறியுள்ளது. ஒரே வார்த்தையில் சொன்னால், நேரு பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தியப் பெரும் பூர்ஷுவாக்களை உயர்ந்த விலைகொடுத்து வாங்கும் கொள்கையை அமெரிக்க ஏகாதிபத்தியம் அமுல் நடத்தி வருகிறது.

அமெரிக்காவாலும், அமெரிக்காவால் கட்டுப்படுத்தப் பட்ட சர்வதேச நிதி நிறுவனத்தாலும் கடந்த பத்து வருடங்களுக்கு அதிகப்பட்ட காலத்தில் இந்தியாவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கப்பட்ட "உதவி"யின் எண்களின் பரிசீலனை, நேரு அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையின், குறிப்பாக சீனா மீது அனுஷ்டித்து வரும் கொள்கையின் அளவு கோலாக காட்டுகிறது. 1949-ல் இருந்து 1956-ம் வருடத்தின் முதல் பாதியின் இறுதிவரையுமுள்ள காலத்தில் அவர்களது "உதவி" 78.91 கோடி அமெரிக்க டாலர். அதாவது வருடத்துக்குச் சராசரி 10.52 கோடி அமெரிக்க டாலர் என புள்ளி விபரம் காட்டுகிறது. 1956-ம் ஆண்டின் பிற்பாதியிலிருந்து 1959-ம் வருடத்தின் முற்பாதியின் இறுதிவரையுள்ள காலத்தில், நேரு அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை சிறிது சிறிதாக வலது திசையில் திரும்பியபோது, இந்தியாவுக்கு அவர்களுடைய "உதவி" 193.67 கோடி அமெரிக்க டாலர்களாகும். அதாவது வருடமொன்றுக்குச் சராசரி 64.55 கோடி அமெரிக்க டாலர். 1959-ம் வருடத்தின் பிற்பாதியிலிருந்து 1962-ம் ஆண்டு ஜுலை மாதம் முடிய, அதாவது நேரு அரசாங்கம் சீன-எதிர்ப்பு இயக்கத்தை தூண்டி விட்ட பின்னர், இந்தியாவுக்கு அவர்களது உதவி 387.24 கோடி அமெரிக்க டாலர்கள்-வருடமொன்றுக்கு சராசரி 129.08 கோடி அமெரிக்க டாலர்களாகும்.

சரியாக இந்தச் சந்தர்ப்பங்களில் தான், கடந்த சில வருடங்களாக, நேரு சர்வதேச விவகாரங்களில் ஏகாதிபத்திய கலோனியல் எதிர்ப்புத் துவஜத்தை ஏறத்தாள தூங்கியெறிந்து விட்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தேவைகளுக்கு தன்னைச் சரிப்படுத்திக் கொண்டதோடு அமெரிக்க ஏகாதியத்தியத்தின் சுறுசுறுப்பான ஊது குழலாக மாறியதோடுமல்லாமல் தேசிய விடுதலை இயக்கங்களை நசுக்குவதற்காக அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு சர்வதேச பேவிாஸ்காரனை பணியாற்றவும் பகிரங்கமாக மாக இந்திய துருப்புகளை கொடுத்தும் உதவினர்.

1960-ல் அமெரிக்க-ஜப்பானிய இராணுவக் கூட்டு உடன்படிக்கைக்கு எதிராக ஜப்பானிய மக்கள் நடத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திய பெரும் போராட்டத்தின் போது "இந்த விவகாரம் பற்றி நான் குறிப்பிடுவதற்கில்லை" என்று சொல்லி ஆதரவோ அனுதாபமோ அளிக்காதிருந்தார்.

அமெரிக்கக் கைக்கூலிகள் கியூபா மீது படையெடுத்த போது "யார் சரி, யார் பிழையென்று இந்தியாவுக்கு கூற முடியாது. கியூபாவின் வெளிநாட்டு நிலைமைகள் பற்றி தீர்ப்புக் கூறக் கூடிய நிலையில் இந்தியா இல்லை" என்று நேரு சொன்னார்.

1961 மார்ச் மாதத்தில் ஏகாதிபத்தியம் காங்கோவில் தலையிடுவதற்கு ஐ. நா. ஸ்தாபனத்தைப் பிரயோகித்ததைக் கண்டிக்கும் முகமாக மாலி, ஐக்கிய அரபுக் குடியரசு, இலங்கை, இந்தோனேஷியா, மொரோக்கோ, பர்மா, கினி இன்னும் மற்றைய ஆசிய ஆபிரிக்க நாடுகள் தமது துருப்புகளைக் காங்கோவிலிருந்து வாபஸ் வாங்குவதாக ஒன்றன் பின் ஒன்றாக அறிவித்த போது நேரு அரசாங்கம் அதற்கு நேர்மாற்றமாக காங்கோலிய மக்களின் தேசீய விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கும், காங்கோவை விழுங்குவதற்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முயற்சிகளுக்கு மேலதிகமாக 3000 இந்திய துருப்புகளை (பிறகு 6000 ஆகக் கூட்டிக் கொண்டது) அனுப்பி வைக்க உடன்பட்டது. காங்கோலிய தேசீய விடுதலை வீரன் லுமும்பாவின் படுபாதகக் கொலையின் பின் அவருடைய வாரிசான கிஸெங்கா சிறை செய்யப்பட்டதற்கு உண்மையிலேயே நேரு அரசாங்கம் ஒரு வகையில் காரணமாகும்.

1961 செம்டம்பரில் நடந்த நடுநிலைமை நாடுகளின் ராஜிய தலைவர்கள் மகாநாட்டில் அநேக நாடுகளின் தலைவர்களது அபிப்பிராயங்களுக்கு முரணாக நேரு ஏகாதிபத்தியத்தையும் கலோனியலியத்தையும் எதிர்ப்பதை "துணிச்சலான பிரகடனங்கள்" என்று கூறி அவைகளை நிறைவேற்றுவதை அங்கீகரிக்கவில்லை. இவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மேற்கத்தியநாடுகளுக்கு விசேஷமாக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகட்கு, பெருமளவு உதவினர்.

*1961*-ம் ஆண்டு மே *29*–ல், "ஐக்கிய அமெரிக்கச் செய்தியும் உலக அறிக்கையும்" என்ற பத்திரிகையில் "ஆசியா அமெரிக்கா பணயம் வைக்கும் மனிதன் மீது நெருங்கிய பார்வை" என்ற தலைப்பில் வெளியான கட்டுரை, உலக அரசியல் தலைவர்களில் இந்தியப் பிரதமர் நேரு, கெனடி நிர்வாகத்தின் மிகப்பெரும் அபிமானியாக மாறிவருகிறார்" என்று கூறியது. ஆனால், சர்வதேசப் பிரச்சினைகளில் நேரு வகிக்கும் பாத்திரம், நேருவுக்குக் "கெட்ட பெயர்" வாங்கிக் கொடுத்துள்ளதென்றே, ஆசிய ஆபிரிக்க நாடுகளில் பொது மக்களின் அபிப்பிராயம் சுட்டிக் காட்கின்றது.

"சர்வதேச உறவுகளில் இந்திய அரசாங்கம் தனித்து ஒதுக்கப்பட்ட நிலையில் உள்ளது" என்றும், "இந்தியாவுக்கு ஆசியாவில் பெரும்பாலும் நண்பர்களே இல்லை" என்றும் ஆனந்த பஸார் பத்திரிகா என்ற பத்திரிகை கூட அதன் *1962* செப்டம்பர் *14*-ந் தேதி ஆசிய தலையங்கத்தில் ஒப்புக்கொண்டது. *1962* செப்டம்பர் மாதம் *22*–ந் தேதி "பிலிட்ஸ்" பத்திரிகை, ஆசிய ஆபிரிக்க நாடுகளில் "இந்தியர்களாகிய நாம் ('நேருவும் அவரைச் சார்ந்தவர்களும்' என்று வாசிக்கவும்) பிற்போக்கு வாதிகளாக அல்லாவிட்டால், சதைனிகளாக மாறி வருகிறோம்" என வருத்தத்துடன் கூறியது.

எனவே, "நடுநிலைமை" என நேருவால் பறைசாற்றப்படும் கொள்கை, மேலும் மேலும், பல்வேறு நாடுகளின் தேசீயப் புரட்சி இயக்கங்களுக்கும் சோஷலிஸத்துக்கும் எதிராகவும், ஏகாதிபத்தியத்துக்கு நேரு கடைப்பிடித்து வரும் கொள்கையின் வெளி முகப்புத்தோற்றமாகவும் அமைந்துள்ளது என்பது வெளிப்படையாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கை மேலும் பிற்போக்கடைந்து வரும் காலகட்டத்தில் தான் நேருவால் தலைமை தாங்கப்படும் இந்திய ஆளும் வட்டாரங்கள் சீன-இந்திய எல்லைப் பிரச்சினையைத் தூண்டிவிட்டது; சீனவுக்குக் கோபமூட்டும் வகையில் நடந்து கொண்டது; கடைசியாக சீனமீது பெருமளவு ஆயுதத் தாக்குதல் நடத்தியது. அவர்கள் அப்படிச் செய்ததற்குக் காரணம் அவர்கள் தமது நில விஸ்தரிப்புக் கொள்கையை விடாப்பிடியாகக் கடைப்பிடிப்பதாகும். இன்னும், இந்திய மக்களின் கவனத்தை திசை திருப்பிவிட்டு அவர்கள் மீது அடக்குமுறையையும், சுரண்டலையும் வளர்ப்பதற்கும், முற்போக்கு சக்திகளைத் தாக்குவதற்கும் வேண்டி சீன-இந்திய நட்புறவைக் கெடுக்கவும், பிற்போக்கு தேசீயவாதஉணர்ச்சியைத் தூண்டிவிடவும் செய்தனர். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவை பெறுவதற்காகவும், அமெரிக்க டாலர் உதவியை அதிகமாகப் பெறுவதற்காகவும் வேண்டிக்கூட அவர்கள் சீன எதிர்ப்புப் பிரசாரத்தைப் பயன் படுத்த முயன்றனர். ஒரே வார்த்தையில் சொல்லப் போனல், தமது சொந்த நலன்களையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கோரிக்கைகளையும் திருப்திப்படுத்துவதற்காக நேருவின் தலைமையிலுள்ள இந்திய ஆளும் வட்டாரங்கள் சர்வதேச சீன எதிர்ப்பு இயக்கத்தில் பகடைக்காய்களாய் விட்டனர். இது தான் சீன-இந்திய எல்லைத் தகராறின் ஆணிவேரும் பின்னணியுமாகும்.

# III

பூர்ஷுவா தேசீயவாதம் பல்வேறுபட்ட நிலைமைகளின் கீழ்மாறுபட்ட சரித்திரபூர்வமான பாத்திரங்களை வகிக்கின்றது என்று மார்க்ஸிஸம்-லெனினிஸம் சுட்டிக்காட்டுகிறது. அடக்கப்பட்ட இனங்களின் தேசீய வாதத்துக்கும், அடக்கியாள்வோரின் தேசீயவாதத்துக்கும் இடையிலும், முற்போக்கு தேசீயவாதத்துக்கு இடையிலும், மார்க்ஸிஸ-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லெனினிஸம் எப்போதுமே வேறுபாட்டை வரையறுத்திருப்பதுடன் இந்த வரையறுப்பின் போக்கில் வேறுபட்ட கண்ணோட்டங்களை பாய்ச்சியுள்ளது.

நவீன காலங்களில் ஏகாதிபத்தியத்துடனும் நிலப்பிரபுத்துவ சக்திகளுடனும் அவைக்குள்ள முரண்பாடுகள் காரணமாக கலோனியல் அரை—கலோனியல் நாடுகளின் தேசீய பூர்ஷுவா வர்க்கம் புரட்சிவாத ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களிலும், சில சரித்திர கட்டங்களிலும், ஒரு வகையிலும், பாகம் வகிக்க முடியும். ஆகையால் சரித்திரத்தில் அவற்றுக்கு ஒரு முற்போக்கான பங்கு உண்டு. லெனின் கூறியிருப்பது போல், "பூர்ஷுவா தேசீயவாதம் ஒரு சரித்திரபூர்வமான நியாயப்பாட்டை கொண்டுள்ளது" (லெனின் நூல்களின் தொகுப்பு). சீனாவின் பூர்ஷுவா தேசீய - ஜனநாயக புரட்சியின் போது, டாக்டர் சன்யட்—சென் சோவியத் யூனியனுடன் அமைத்துக் கொண்ட நட்புறவுக் கொள்கைகளும் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒத்துழைப்பும், விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் வழங்கிய உதவியும் முற்போக்கு தேசீயவாதத்தின் தலைசிறந்த உதாரணத்தைத் தருகின்றன. மறுபுறம், எப்படியிருப்பினும் கலோனியல், அரை—கலோனியல் நாடுகளின் பூர்ஷுவா வர்க்கம் அவற்றின் வர்க்க அந்தஸ்தின் காரணமாக, ஏகாதிபத்தியத்துடனும் நிலப்பிரபுத்துவத்துடனும் சமரஸம் செய்துகொள்ளக் கூடிய தன்மையைப் பெறுவதுடன். ஏகாதிபத்தியத்துக்கும் நிலப்பிரபுத்துவத்துக்கும் எதிராக நடக்கும் புரட்சியில் எப்பக்கமும் சாயக்கூடிய சாத்தியப்பாடு கொண்டுள்ளது. ஏகாதிபத்தியத்தினதும் உள்நாட்டு நிலப்பிரபுத்துவத்தினதும் நலன்களுடன் நெருங்கிய தொடர்பைப் பெற்ற பெரும் பூர்ஷுவா வர்க்கத்தின் ஒரு சாரார், பூர்ஷுவா வர்க்கத்துக்குள் பிற்போக்கானவர்கள். சில சூழ்நிலைகளில், அவர்கள் தேசீய சுதந்திர இயக்கத்துடன் சேர்ந்து கொள்ளலாம். ஆனால் வெகுஜனங்களின் பெருவாரியானோர் உண்மையில் எழுச்சி பெற்றதும், வர்க்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டம் உக்கிரம் பெற்றதும் அவர்கள் ஏகாதிபத்திய வாதிகளால் லஞ்சம் அளிக்கப்பட்டு மக்களையும், கம்யூனிஸ்ட் கட்சியையும், முற்போக்கு சக்திகளையும் அடக்கி ஒடுக்கியும், ஏகாதிபத்தியத்துக்கு விலைபேசி விற்றும், பிற தேச சோஷலிஸ நாடுகளை எதிர்த்தும் புரட்சியைக்காட்டிக் கொடுத்து விடுவார்கள். சீன மக்களால் தூக்கியெறியப் பட்ட சியாங்கை ஷேக் பிற்போக்குவாதக் கும்பல் இதற்கு சிறந்த உதாரணமாக அமைகின்றது.

இரண்டாம் உலகயுத்தத்திற்குப் பின்னர் பூர்ஷுவா தேசியவாதிகளால் தலைமைதாங்கப்பட்ட அநேகமான புதிய சுதந்திர நாடுகள் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் தலைதூக்கின. ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் உள்ள அநேக தேசிய அரசுகள் இன்னும் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பாலும் தலையீடுதலாலும், புதிய பழைய கலோனியல்வாதிகளின் கட்டுப்பாட்டுக்கும், கொள்ளைக்கும் ஆளாகியிருப்பதாலும், ஏகாதிபத்தியத்தையும் கலோனியலிஸத்தையும் எதிர்க்கவும் உலக சமாதானத்தைப் பாதுகாக்கவும் பொது அபிலாஷைகொண்டுள்ளன. அவைகள் ஏகாதிபத்தியத்தையும், புதியதும் பழையதுமான கலோனியலிஸத்தையும் எதிர்த்துத்தொடர்ந்து போராடுவதுடன் சோஷலிஸ நாடுகளுடன் நட்புறவை தோற்றுவித்து விருத்தி செய்யவும், ஒத்துழைப்பை வளர்க்கவும், அதன் மூலம் உலக சமாதானத்துக்கு உருப்படியான பங்கை செலுத்தவும் செய்கின்றன.

சீன மக்களும், ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க கண்டங்களின் தேசிய நாடுகளின் மக்களும் ஏகாதிபத்தியங்களின் படுபாதகமான அடக்குமுறைக்கும் கொள்ளைக்கும் பொதுவாக ஆளாகியிருக்கிறார்கள். சீனு இன்னும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக்கு இலக்கான நிலையில் உள்ளது. அதன் தைவான் பிரதேசம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கையில் உள்ளது. தேசிய நாடுகளின் மக்கள் மீது சீன மக்கள் ஆழ்ந்த அனுதாபத்தையும் கரிசனையையும் பெற்றிருப்பது இயற்கையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நாடுகளின் சம்பந்தத்தைப் பொறுத்தமட்டில் சீனாவின் கொள்கை இதுவே. முதலாவதாக, சீனாவினதும் சகல தேசீய நாடுகளினதும் முக்கியமான பொதுவான பணி, அவைகளின் பொது வைரியான ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதே. ஏகாதிபத்தியத்துக்கும் கலோனியலிஸத்துக்கும் எதிராக நடக்கும் போராட்டங்களில் அவைகள் பரஸ்பரம் ஆதரவு அளிக்கவேண்டும். ஏகாதிபத்தியத்துக்கும் கலோனியலிஸத்துக்கும் எதிராக பல்வேறு தேசீய அரசுகள் தொடுத்த போராட்டங்களுக்கு சீனா நிலையான உறுதியான ஆதரவு வழங்கியுள்ளது. இரண்டாவதாக, சீனாவுக்கும் இந்த நாடுகளுக்கும் இடையே, பஞ்சசீல சமாதான சகஜீவனக் கொள்கைகளின் அடிப்படையில் நட்புறவு முறைகளையும் ஒத்துழைப்பையும் ஸ்தாபித்து விருத்திசெய்வது அவசியமும் சாத்தியமுமாகும். அவைகளுக்கு இடையில் தீர்வுகாணப்படாத தகராறுகளை பஞ்சசீல கொள்கைகளுக்கும் பாண்டுங் உணர்வுக்கும் இணங்க சிநேகபூர்வமான ஆலோசனைகள் மூலம் ஒரு நியாயமான உடன்பாட்டை அடைவது அவசியமும் சாத்தியமுமாகும்.

இதேபோல் இந்தியாவோடு எப்பொழுதுமே நட்புறவுடன் வாழவேண்டுமென்று சீனா உறுதியாக விரும்புகிறது. சீன மக்களுக்கும் இந்திய மக்களுக்கும் இடையே நிலவும் நட்புறவு முறைகள் நீண்ட வரலாற்றைப் பெற்றவையாகும். எம்மிரு நாட்டு மக்களுக்குமிடையே ஜீவாதாரமான நலவுரிமைகள் சம்பந்தப்பட்ட மோதல்கள் கிடையாது. 1954-ல் சீன–இந்திய அரசாங்கங்கங்களின் கூட்டு முன் முயற்சியின் விளைவாக பஞ்சசீல சமாதான சகஜீவனக் கொள்கைகள் பிறந்து அவைகளின் அடிப்படையில் எழுப்பப்பட்ட சீன இந்திய உறவு முறைகள் ஒரு காலத்தில் மங்களகரமானவையாய் இருந்தன. இரு நாடுகளும் நேசபான்மையுடன் வாழ்ந்த காலத்தின் ஞாபகத்தை இந்திய மக்களைப் போலவே சீன மக்களும் பெரிதும் நேசிக்கின்றனர். சீன-இந்திய உறவுகள் சுமுகமாக இருந்த பருவத்திலும், நேருவால் தலைமை தாங்கப்படும் இந்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளும் வட்டாரங்கள் எம்முடைய திபேத் மீது தலையீட்டுக்குமேல் தலையீடு நடத்தியதுடன், திபேத்துக்கு எதிரான நில விஸ்தரிப்பு சூழ்ச்சிகளையும் மனதில் வைத்திருந்தன. இதனால் அவர்கள் தம்முடைய பிற்போக்கு தேசீயவாதக் கொள்கையை வெளிப்படையாக்கிக் கொண்டனர். பிறகு 1959-ல் நேருவால் தூண்டிவிடப்பட்ட திபேத் சமுதாய மேல் தட்டு பிற்போக்குக் கும்பலின் கலகம் தோற்கடிக்கப்பட்டதும், நேருவின் திபேத்திய நில விஸ்தரிப்புக் கனவு சின்னபின்னமாக்கப்பட்டது. அத்துடன் தன்னுடைய உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளில் மேலும் பிற்போக்கான போக்கை அனுஷ்டித்து உடனடியாக தனது தோழனுக்கெதிராகத் திரும்பி சீனத்து நட்புறவு பஜனையை நிறுத்திவிட்டு சீனாவின் மீது மூர்க்கமான விரோதத்தை வளர்த்தார்.

அவருடைய பஞ்சோந்தித்தனமான தவறான நடத்தை அவருடைய "வாழ்க்கைத் தத்துவத்துடன்" இணக்கமுடையதென்று நேரு விஸ்வாசிக்கிறார். "வாழ்க்கை ஒரு நிலையான சித்தாந்தத்தின் நான்கு கோணங்களுக்குமிடையில் எழுப்பப்படுவதற்கு.........வாழ்க்கை மிகவும் சிக்கலானது" என்று அவருடைய "நான்கண்ட இந்தியா" என்ற நூலில் கூறியுள்ளார் (பக்கம் 16, 3-ம் பதிப்பு மெரீடியன் புக்ஸ் லிமிட்டட், லண்டன், 1951). "தனக்குத் தட்டுப்படும் உண்மையை உறுதியாக பின்பற்றுவதுடன் வாழ்க்கையின், விசேஷமாக அரசியல் வாழ்க்கையின், சந்தர்ப்ப நிர்ப்பந்தங்களுடன் சமரஸம் ஏற்படுத்திக் கொள்வதென்பது ஒருகாலும் இலகுவான காரியமல்ல" என்றும் அவர் கூறியிருக்கிறார் (அதே நூல்: பக்கம்421) .சந்தர்ப்ப தேவைகளை செயலின் அளவுகோலாக வகுத்துக்கொள்வதே அரசியலின் "விஸ்வ நியதி" என்று அவர் கருதினர். ஒரே வார்த்தையில் கூறுவதாயிருந்தால், ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒருவருக்கு நட்புறவு காட்டுவது அவருடைய தத்துவத்துடன் உடன்பாடு உடையதாக இருக்கிறது. "நூறு பல நூற்றாண்டுகளாக" ஒருவரை கோபாவேஷத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்நோக்கி நிற்கும்'' ஆசை அவருடைய தத்துவத்துடன் உடன்பாடுடையதாக இருக்கிறது. அத்துடன் ஒருவரை அழித்துவிட அவருக்குள்ள எண்ணமும் அவருடைய தத்துவத்துடன் உடன்பாடுடையதாக இருக்கிறது. தனது பிற்போக்குக் கொள்கையை வழி நடத்திச் செல்ல இப்பேர்ப்பட்ட ''தத்துவத்தை'' நேரு கடைப்பிடிக்கிறார். அவருடைய பிற்போக்குக் கொள்கை, தவறான நடத்தை இரண்டும் இந்தியாவின் பெரும் பூர்ஷுவாக்களினதும் பெரும் நிலப்பிரபுக்களினதும் நலன்களுக்கு சேவகம்செய்து நிற்பதுடன், நேருவின் வார்த்தைகளிலேயே அவர்களுக்கு ''பெரும் லாபத்தை'' கொண்டு வரவிருக்கின்றன.

நேருவால் பின்பற்றப்படும் இந்த பிற்போக்கு தேசீயவாத கொள்கை சம்பந்தமாக மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்டுகள் எடுக்க வேண்டிய நிலைமை என்ன? 30 வருஷங்களுக்கு முன்னர் சீன சரித்திரத்தில் நடந்த ஒரு சம்பவம் பற்றிய குறிப்பு பிரயோஜனமுடையதாய் இருக்கும். சோவியத் யூனியன் உலகின் ஏகத் தனி சோஷலிஸ ராஜ்யமாக இருந்த காலத்தில், அது சியாங்கை-ஷேக்கால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட சீனாவின் பிற்போக்கு பெரும்பூர்ஷுவாக்களாலும் பெரும் நிலபிரபுக்களாலும் தூண்டப்பட்டதையும், தாக்கப்பட்டதையும் சீன மக்கள் இன்றும் ஞாபகத்தில் வைத்துள்ளனர். அக்காலத்தில் சீன-கோமிண்டாங் அரசாங்கத்திற்கு சோவியத் அரசாங்கம் சக்திவாய்ந்த ஆதரவு வழங்கியது உண்மையாயிருந்தபோதிலும், சியாங்கை-ஷேக் தலைமையிலிருந்த கோமிண்டாங் பிற்போக்குவாதிகள், புரட்சித் துரோகம் செய்ததற்கும் ஏகாதிபத்தியத்திற்கு சரணடைந்ததற்கும் பின்னர் உடனடியாக, அவர்களுடைய எல்லையற்ற கம்யூனிஸ-எதிர்ப்பு மக்கள்-எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்ததுடன், அதே காலத்தில் சோவியத-எதிர்ப்பு இயக்கத்தையும் தூண்டிவிட்டனர். 1927 டிஸம்பரில், கோமிண்டாங் பிற்போக்குவாதிகள் சீனாவின் பல்வேறு நகரங்களில் இருந்த சோவியத் தூதுவராலயங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவந்தமாகவும் படுபாதகமாகவும் மூடியதுடன், சோவியத் ராஜதந்திரிகளை கைது செய்ததுடனும் கொலை செய்ததுடனும், சோவியத் யூனியனுடன் ராஜ்ய உறவுகளையும் முறித்துக்கொண்டனர். 1929 ஜூலையில், ஒரு வருடத்திற்கு மேலான பின்னர், கோமின்டாங் பிற்போக்குவாதிகள் "1924-ம் ஆண்டு சீன சோவியத் உடன்படிக்கைகளுக்கு" முரணாக "சீன கிழக்கத்திய ரெயில்வே வழக்கை சிருஷ்டித்து 300-க்கு மேற்பட்ட சோவியத் இனத்தவர்"களைக் கைது செய்தது. சோவியத் யூனியன் பொறுமையை இழக்காது, கட்டுப்பாட்டுடன், சீன கிழக்கத்திய ரெயில்வேப் பிரச்சினைக்கு சமாதானபூர்வமான உடன்பாட்டுக்கான பேச்சுவார்த்தை நடத்த கோரியபோது, சோவியத் யூனியன் கடைப்பிடித்த சுயக்கட்டுப்பாட்டை "சோவியத யூனியன் எல்லளவும் எதிர்ப்புக் காட்டாது பயமுற்று தலைக்குணிவதாக" சியாங்கை ஷேக் கருதினார். அதே ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் பிற்போக்கு கோமின்டாங்கின் ராணுவம் சோவியத் எல்லையைத் தாக்கி சீனாவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் ராணுவ மோதலை கிளப்பிவிட்டது. ஆகவே சோவியத் யூனியன் தற்பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க கட்டாயப்படுத்தப்பட்டு கோமின்டாங் பிற்போக்குவாதிகளின் ராணுவ தூண்டுதலைத் தோற்கடித்தது.

அத்தருணத்தில் சோஷலிஸ சோவியத் யூனியன் சரியாக நடந்து கொண்டதா? அதற்குப் பிற்பட்ட காலத்தில் சரித்திரம் தீர்ப்பை வழங்கியுள்ளது: அது பரிபூரணமான சரியான நடவடிக்கை. கோமின்டாங் பிற்போக்குவாதிகளின் ராணுவத் தூண்டுதலுக்கு சோவியத் யூனியன் வழங்கிய உறுதியான எதிர்த்தாக்குதல் சோஷலிஸ ராஜ்யத்தின் நலன்களைப் பாதுகாத்ததுமல்லாமல், சீன மக்களினதும் உலக புரட்சிவாத மக்களினதும் நலன்களுடன் இணக்கமுடையதாகவும் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சீன-இந்திய உறவுகள் 30-க்கு மேலான வருடங்களுக்கு முன்னதாக நிலவிய சீன-சோவியத் உறவுகளைப் போன்றவையாகும்.

சீனவின் வெளிநாட்டுக் கொள்கைகளின் நியதிகளும் இந்தியா சம்பந்தமான அதன் கொள்கைகளும் நியதிகளும், நிலையானவை; உறுதியானவை. நேரு அரசாங்கத்தின் தொடர்ச்சியான தூண்டுதல் நடைபெற்ற போதிலும், சீன அதிக பட்ச கட்டுபபாடு நிலைமையை அனுஷ்டித்தது. அண்மையில் நேரு அரசாங்கம் பெருமளவு தாக்குதலைத் தொடுத்த போதுதான் சீன தன் ஆதிபத்தியத்தையும் பிரதேசப் பூரணத்துவத்தையும் பாதுகாக்கவும், இந்திய பிற்போக்குவாதிகளின் தாக்குதலை தோற்கடிக்கவும் பாதுகாப்பு ரீதியாக எதிர்த்தாக்குதல் நடத்த நிர்ப்பந்திக்கப் பட்டது. சீன அந்நடவடிக்கையையெடுக்க பூரணத்தேவையும் நியாயமுமுண்டு. அது ஆதிபத்தியம் படைத்த ஒரு ராஜ்யம் எடுக்க வேண்டிய குறைத்தபட்ச நடவடிக்கையாகும். இக் காரணத்தினல் தான் சமாதானத்தைப் போற்றி நியாயத்தைத் தூக்கிப் பிடிக்கும், உலக மக்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் சீன பெற்றிருக்கிறது.

நேரு அரசாங்கம் சீன-இந்திய எல்லைத் தகராறை ஆரம்பித்தப் பின்னர் மார்க்ஸிஸம்-லெனினிஸத்தின் துரோகிகளும், ஏகாதிபத்திய வாதிகளின் கையாட்களுமான யூகோஸ்லாவிய நவீன திரிபுவாதிகள் சீன-இந்திய எல்லைப் பிரச்சினையின் உண்மை நிலைக்கு பரிபூரணமாக எதிராக, நேரு அரசாங்கத்தின் படுபாதகமான சீன-எதிர்ப்புக் கொள்கையைப் பகிரங்கமாக ஆதரித்தனர். டிட்டோவும் அவர் இனத்தவர்களும் சீன-இந்திய எல்லைப் பிரச்சினை சம்பந்தமாக சீனவுக்கு எதிராக எப்போதுமே வெட்கக்கேடான அவதூறுகளைப் பரப்பியதுடன் ஏகாதிபத்திய வாதிகளினதும் இந்திய பிற்போக்குவாதிகளினதும் எதிரொலியாக ஒலித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், சீன-இந்திய எல்லைப் பிரச்சினையில் சீனு சம்பந்தமாக சோவியத் யூனியன் "அமைதியை ஏற்படுத்தும் பாகத்தை ஏற்று இயங்க வேண்டுமென்று" டிட்டோ கூறியுள்ளார். ஒரு சோஷலிஸ நாடு ஒரு அந்நிய நாட்டின் பூர்ஷுவா பிற்போக்கு வாதிகளால் படையெடுக்கப்பட்டிருக்கும் போது, இன்னெரு சோஷலிஸ நாடு பூர்ஷுவா பிற்போக்கு வாதிகளின் பக்கம் சார்ந்து நிற்க வேண்டுமென்றும் படையெடுக்கப்பட்ட சோஷலிஸ நாடு சம்பந்தமாக "அமைதியை ஏற்படுத்தும்" பாகத்தை ஏற்று இயங்க வேண்டுமென்றும் டிட்டோச்கும்பல் எண்ணுகிகிதா? இந்தத் தவருன வாதத்தால் டிட்டோக் கும்பல், சோஷலிஸ சீனுவை வெறுக்கும், சோஷலிஸத்தைக் காட்டிக் கொடுக்கும், சோஷலிஸ நாடுகள் மத்தியில் பிளவை உண்டுபண்ணும் துரோகிகள் கூட்டமாக தன்னை மேலும் அம்பலப்படுத்திக் கொண்டது. பூர்ஷுவா தேசீய வாதமும் பாட்டாளி வர்க்க சர்வதேசீயவாதமும் இரண்டு வேறுபட்ட வர்க்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இரு வேறுபட்ட உலக கண்ணேட்டங்களென்றும், அவை ஒன்றையொன்று அடிப்படையில் எதிர்த்து நிற்பவையென்றும் மார்க்ஸிஸம்-லெனினிஸம் எக்காலும் சுட்டிக் காட்டுகிறது. முற்போக்கு பூர்ஷுவா தேசீயவாதத்தை ஆதரிக்கும் அதே வேளையில், நமக்கும் பூர்ஷுவா தேசீய வாதத்துக்குமிடையில் தெட்டத் தெளிவான கோட்டை கம்யூனிஸ்டுகள் வரையறுத்துக் கொள்வதுடன், பிற்போக்கு பூர்ஷுவா தேசீயவாதத்தை எதிர்த்துப் போராடவும் வேண்டும்.

30-க்கு மேலான ஆண்டுகளுக்கு முன்னர் சோவியத் எதிர்ப்பு இயக்கத்தை கோமிண்டாங் பிற்போக்கு வாதிகள் கட்டவிழ்த்த போது, பெரும் பூர்ஷுவாக்களின் பிற்போக்கு தேசீயவாதத்தின் வலையில் சீன கம்யூனிஸ்டுகள் சிக்கவில்லை. கோமிடாங், அரசாங்கத்தின் சோவியத் -எதிர்ப்புப் பாகத்தை எதிர்த்து சீன கம்யூனிஸ்டுகளும் முற்போக்கு வாதிகளும் வன்மையான கண்டனங்கள் தெரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தனர். 1927, டிசம்பர் 24-ந் தேதி சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி வெளியிட்ட அறிக்கை கூறியதாவது: "பிற்போக்கு கோமிண்டாங் அரசாங்கம் புரட்சிவாத சீனுவை அறவே பிரதிநிதித்துவப் படுத்தவில்லை. ருஷியாவுடன் உள்ள ராஜீய தொடர்புகளை கத்தரித்துக் கொள்ள கோமிண்டாங் அரசாங்கம் விடுத்துள்ள கட்டளை பெருவாரியான சீன மக்களின் அபிப்பிராயத்தை பிரதிநிதித்துவப் படுத்தவில்லை. பிற்போக்கு கோமிண்டாங் அரசாங்கம் சோவியத் யூனியனை ஒரு எதிரியாக கருதுகிறது. ஆனால் நாமாகிய வெகுஜனங்கள் சோவியத் யூனியனை சீனுவின் சிறந்த நண்பன் என்று கருதுவதுடன், சீன புரட்சிக்கும் உலக புரட்சிக்கும் போராட சோவியத் யூனியனுடன் எப்போதுமே ஐக்கியப்பட்டு நிற்போம்". கட்சியையும் நாட்டையும் பாழ்படுத்தும் பாதகர்கள் என்று அன்றைய அதிகார பீடத்துக்கு தந்தியொன்றையும் கோமிண்டாங் கட்சிக்குள்ளிருந்த புரட்சிவாதிகளின் தலைவரான சூங் சிங் லிங் அனுப்பினுர். வடகிழக்கு சீனுவில், 1929 ஜூலையில் சோவியத்-எதிர்ப்பு யுத்தத்தை பிற்போக்குக் கோமிண்டாங் கும்பல் தொடுத்த பின்னர், "சோவியத் யூனியன் மீது தொடுக்கப்பட்ட யுத்தத்துக்கு எதிராக விரிந்து பரந்த வெகுஜனங்கள் எழவேண்டுமென" இன்ஞெரு உறுதியான பிரகடனத்தை சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி வெளியிட்டது. இவ்வழைப்புக்கு இணங்க பிற்போக்கு கோமிண்டாங் கும்பலின் கொடூரமான அடக்குமுறையை பொருட்படுத்தாது பிற்போக்கு கோமிண்டாங் கும்பலின் சோவியத்-எதிர்பபு ராணுவத்தூண்டுதலை வன்மையாக எதிர்த்து, பொதுக் கூட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும், சீன கம்யூனிஸ்டுகளும் விரிந்து பரந்த மக்களும் நடத்தினர். இதற்காக, அநேக கம்யூனிஸ்டுகளும், தொழிலாளர்களும், விவசாயிகளும், மாணவர்களும் முற்போக்குவாதிகளும் தம்முயிர்களை கீர்த்தியுடன் தியாகஞ் செய்தனர்.

கோமிண்டாங் பிற்போக்குவாதிகளை எதிர்த்ததிலும், சோஷலிஸ சோவியத் யூனியனை ஆதரித்ததிலும் சீன கம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூனிஸ்ட் கட்சியின் நடத்தை சரியானதா? அது பரிபூரணமாக சரி என்பதில் ஐயமில்லை. சோவியத்-எதிர்ப்பு இயக்கத்தில் கோமிண்டாங் பிற்போக்குவாதிகள் விசிறி வீசிவிட்ட குறுகிய தேசீயவாதப் போலிப் பிரச்சாரத்தை பரிபூரணமாக அம்பலப்படுத்தியவர்கள் கம்யூனிஸ்டுகளைத் தவிர வேறு யாருமில்லை. மிகக் கடினமான நிலைமைகளிலும் உண்மையை உயர்த்திப் பிடித்து, சீன சோவியத் மக்களின் நட்புறவை உறுதியாக பேணிப் பாதுகாத்தவர்களும் சீன கம்யூனிஸ்டுகளைத் தவிர வேறு யாருமில்லை. அன்றைய பாதகமான நிலைமைகளிலும், சீன கம்யூனிஸ்டுகள் சீன மக்களின் நலன்களிலும், பாட்டாளி வர்க்க சர்வதேச கோட்பாட்டிலும் உண்மையான விஸ்வாசமுடையவர்கள் என்பதை தம் செயலால் ருஜுபடுத்தினார்கள் என்று உணரும் போது இன்றும் நாம் பெருமைப்படுகிறோம்.

30-க்கு மேற்பட்டவருடங்களுக்கு முன்னர் சீன கம்யூனிஸ்டுகளும் முற்போக்கு வாதிகளும் ஆளாயிருந்தது போன்ற நிலையையில்தான் இன்று இந்திய கம்யூனிஸ்டுகளும் முற்போக்குவாதிகளும் உள்ளனர். நேரு அரசாங்கத்தின் பிற்போக்குக் கொள்கையின் விளைவாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் முற்போக்கு சக்திகளும் அடக்கு முறைக்கு இலக்காகியிருக்கின்றன. நேரு அரசாங்கம் சீன–எதிர்ப்பு இயக்கத்தை திருகிவிடும் பிரதியொரு சந்தர்ப்பத்திலும், நேரு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மீதும் முற்போக்கு சக்திகள் மீதும் அதே வேளையில் தாக்குதலை தொடுக்கிறார். ஆனால் பெருவாரியான இந்திய கம்யூனிஸ்டுகளும் முற்போக்குவாதிகளும் பெருவாரியான அரசியல் பிரக்ஞை பெற்ற தொழிலாளர்களும், விவசாயிகளும், புத்திஜீவிகளும், நியாய எண்ணம் படைத்த மக்களும், இந்திய ஆளும் வட்டாரங்களின் பிற்போக்குப் பிரச்சாரத்தினால் ஏமாறிவிடவோ, அல்லது அவர்களின் தாக்குதல் முன்னர் தலைகுனிந்து விடவோ இல்லை. மிகக் கடினமான நிலைமைகளிலும், அவர்கள் இந்

திய மக்களின் நலன்களைக் கருதி சத்தியத்துக்கும், தர்மத்துக்கும், சீன-இந்திய நட்புறவுக்கும் உறுதியாக நின்றதுடன், தளராத போராட்டங்களும் நடத்தியுள்ளனர். அவர்கள் தான் பெரும் இந்திய மக்களினதும் இந்திய தேசிய இனத்தினதும் நலன்களை உண்மையில் பிரதிநிதித்துவப்படுத்துகிறுர்கள் என்பதற்கு சரித்திரம் சான்று கூறும்.

இந்திய பிற்போக்குக் கும்பலும், உள்ளும் வெளியிலுமுள்ள ஆதரவாளர்களும் எழுப்பும் சீன-எதிர்ப்புக் கலாட்டாவின் ஒப்பாரி முழக்கம், ஒரு காலகட்டத்துக்குள், எவ்வளவு தான் உரத்ததாக இருந்தாலும் இந்திய மக்களின் நியாயமான குரலை மூழ்கடித்து விட முடியாது. இதற்கு ஓர் உதாரணமாக, கல்கத்தா பத்திரிகையான "ஜுகந்தரி"ன் ஆசிரியர் கடிதப் பகுதியில் 1962, மே 16-ல் பிரசுரமான கடிதத்தை வாசகர்களுக்கு இங்கே குறிப்பிட விரும்புகிறேம். அந்த சாதாரண இந்தியர் எழுதியதாவது:

"..........இந்திய பூகோளப் படத்தின் படி 12,000 சதுர மைல்களை ஸ்வீகரித்துள்ளதால் சீன ஆக்கிரமிப்பு நாடாலுல், சீன பூகோளப் படத்தின் படி 38,000 சதுர மைல்களை ஸ்வீகரித்துள்ள இந்தியாவும் ஆக்கிரமிப்பு நாடாகியுள்ளது. மற்றத் தரப்பு அதனுடைய பூகோளப் படத்தை குப்பைக் கூடைக்குள் எறிந்து விட்டு, எம்முடைய பூகோளப் படத்தின் படி தன்னுடைய எல்லையை வரையறுத்துக் கொள்ளும் என்று எண்ணுவது நியாயமான நிலைமையல்ல........ இந்திய-சீன எல்லைப் பிரச்சினையின் மிக துரதிஷ்டமான அம்சம் என்னவெனில், இது இன்று அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான ஆயுதமாகியுள்ளது. பிரச்சினைக்கு தீர்வு காண்பதை தாமதிப்பதுமல்லாது சில வேளை பிரச்சினையை நிலைக்க வைத்து உள்நாட்டு அரசியலை தீய மார்க்கத்தில் வழி நடத்தி செல்வதற்காகவும் ஆயுதமாக்கப்பட்டுள்ளது. இரண்டாவது பொதுத் தேர்தலின் (1957) விளைவாக இடதுசாரி சக்திகளின் பலம் மேலோங்கியதுடன், ஒரு இந்திய ராஜ்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்யூனிஸ்டுகளின் ஆட்சிக்குள் சென்றது. அன்று முதல், அரசாங்கம் படிப்படியாக வலது நோக்கிச் செல்லும் போக்கை நாம் நடைமுறையில் கண்டுள்ளோம். எல்லைப் பிரச்சினை தலை தூக்கிய சொற்ப காலத்துக்கு முன்னர் சீனு தன் வேலையில்லாப் பிரச்சினையை தீர்த்துக்கொண்டதாலும், துரிதமான முன்னேற்றம் பெற்றிருப்பதாலும், சீனு ஜனநாயக நாடல்ல என்று நேரு கூறினுர். அதன் பின்னர், அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட மாலவியா கமிஷன், சீன நிலச் சீர்திருத்தத்தை பெரிதும் புகழ்ந்தது இயற்கையாகவே உள்நாட்டு நிலப்பிரபுத்துவ சக்திகளை பெரிதும் திகிலடையச் செய்தது. கடைசியாக, கிழக்கத்திய மேற்கத்திய மார்க்கட்டுகளில் இந்திய தொழிலதிபர்கள் பெரும் லாபங்களை திரட்டுவதற்கு சீன உற்பத்திச் சரக்குகள் தடையாக அமைந்தபோது, எந்த சாக்கு போக்கையும் வைத்து உறவு முறைகள் கெடுக்கப்படும் என்பது அனுமானிக்கப்பட்டது. அதன் பின்னர், எல்லைப் பிரச்சினை ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. சீனு சம்பந்தப்பட்ட சகலத்தையும் திரித்து கூறுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கண்டு பிடிக்கப்பட்டது மாத்திரமல்ல, நாட்டினுள்ளே படிப்படியாக வளர்ந்து வந்த முற்போக்கு இயக்கங்களில் குறை குற்றம் பிடிப்பதற்கும் ஒரு சுளுவான வழி திறக்கப்பட்டது. மிகக் குறுகிய காலகட்டத்துக்குள், எல்லைப் பிரச்சினை, முதலாவது எல்லையில் ஊடுருவலாகவும், பின்னர் எல்லை ஆக்கிரமிப்பாகவும் உருமாற்றபபட்டது. அன்று தொடக்கம் எல்லா அரங்குகளிலும் கேரள இடைக்கால தேர்தலிலும், மேற்கு வங்க உணவு இயக்கங்களிலும், அரசாங்க ஊழியர்களின் வேலைநிறுத்தங்களிலும், இறுதியாக மூன்ரும் பொதுத் தேர்தலிலும் (1962) அது செயல்படுத்தப் படுவதை நடைமுறையில் கண்டுள்ளோம். உணவு இயக்க காலத்தில், "இயக்கமெதுவும் நடத்தாதீர்கள், ஆக்கிரமிப்பு எண்ணத்துடன் சீனு படைகளை எல்லையில் குவிக்கிறது!" என்று கல்கத்தா சுவர்களை நிரப்பிய சுவரொட்டிகள் அநேக மக்களின் ஞாபகத்தில் இருக்கும். மூன்ரும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் இன்று, மத்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவிலும் வட இந்தியாவிலும் வலதுசாரி சக்தி தலை தூக்குவதற்கு, பிரச்சாரம் செய்யப்பட்ட இந்த சீன ஆக்கிரமிப்பு முக்கியமான காரணங்களில் ஒன்ருகும் .........
சீன ஊடுருவலைப் பற்றிய புத்தம் புதிய செய்திகளை படிக்கும்போது பிரச்சினை தெட்டத் தெளிவாகிறது. இந்நாட்களில், பெருவாரியான சந்தர்ப்பங்களில், இந்த புதிய காவல் நிலையங்கள் பின்னர் கண்டுபிடிக்கப்படுவதில்லை. அல்லது, பின்னர் கண்டுபிடிக்கப்பட்டாலுல் அவை சீன மண்ணுக்குள் சில யார் தொலைவில் இருந்திருக்கின்றன (தேர்தலுக்கு சற்று முன்னதாக சீன "ஆக்கிரமிப்பு" பற்றி ராஜ்ய சபையில் நேரு நிகழ்த்திய சொற்பொழிவு.) அல்லது, முதல் தினத்தில் அச் செய்தி கொட்டை எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தால், இரண்டு தினங்களுக்குப் பின்னர் அது "உத்தியோக பூர்வமாக ஊர்ஜிதம் செய்யப்படவில்லை" என்று குட்டி எழுத்துக்களில் பிரசுரிக்கப்படும். சீன நில விஸ்தரிப்பு வெறி பிடித்ததாய் இருந்தால் நேபாளத்துடனும் பர்மாவுடனும் தன் எல்லைத் தகராறை எப்படி தீர்த்துக்கொள்ள முடியும்? இன்று இக் கேள்விகளை எழுப்புவதற்கு தடையுண்டு. சீனவை ஆக்கிரமிப்பு நாடென்று குறிப்பிடாவிட்டால் தேசத் துரோகமாகும் என்று பல திசைகளிலும் பகிரங்கமாக சொல்லப்படுகிறது. ஆனல், சாதாரண இந்தியர்களாகிய நாம் இதனலடையும் நன்மை என்ன? சில வேளை, கிழக்கில் "ஜனநாயகத்தை" பாதுகாக்க எமக்கு சிறிது கூடிய அமெரிக்க "உதவி" கிடைக்கலாம். ஆனல், அதற்குப் பின்னர்? சரித்திரத்துக்கு நாம் கொடுக்கும் பதில் தான் என்ன? இன்று யங்டிஸி—யூஃப்ரடீஸ் நதிகள் முதல் நைல்-காங்கோ நதிகள் வரை வியாபித்துள்ள ஆசிய ஆபிரிக்க மக்கள் பிரமாண்டமான வேகத்தில் முன்னேறியுள்ளனர். புதிய வாழ்க்கையோட்டத்தில் புகுந்துள்ள மடிந்த காலத்தின் இந்த கசப்புக் குரலை மூழ்கடித்து விட்டு, இப் பெரும் சமாதான நட்புறவில் நாமும் இணைந்து கொள்வது சாத்தியந் தானே?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இந்திய வாசகர், லட்சோப லட்சக் கணக்கான இந்திய மக்களில் ஒருவராகும். எல்லைப் பிரச்சினையை வைத்து சீன-எதிர்ப்பு இயக்கத்தை தட்டி விட நேரு திட்டமிட்டு, வகுத்துள்ள சூழ்ச்சியை அவ்வாசகர் தெளிவாக இனம் கண்டு பிடிக்கிறார். மேலும் இதர, ஆசிய ஆபிரிக்க மக்களுடன் இந்திய மக்கள் நட்புடனிருந்து அவர்களுடன் அணி வகுத்து முன்னேறுவார்கள் என்ற உள்ளக் கிடக்கைத் தான் எவ்வளவு துடிதுடிப்பானது!

இந்திய மக்கள் தெளிவான திருஷ்டி பெற்றவர்கள் என்பது தெளிவானது· நேரு என்ன கபட வேஷந்தான் தரித்தாலும் பரந்து விரிந்த இந்திய வெகு ஜனங்கள் ஏமாறப் போவதில்லை.

ஆனால், மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்டுகள் என்று சுய-நாமகரணம் பூண்டுள்ள எஸ். ஏ. டாங்கே போன்ற சிலர், சீனு இந்திய மண்ணில் ''ஊடுருவி விட்ட''தென்றும், சீனு விஸ்வாசத் துரோகம் செய்து விட்டதென்றும் பொய்க் குற்றஞ் சாட்டியும், ''இந்திய அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க வேண்டுமென்றும்'' நேருவைப் பின் தொடர்வது வியப்பாய் இருக்கிறது இந்த ''மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்டு'' களின் கிரஹிப்பு சாதாரண இந்திய மக்களின் கிரஹிப்பிலிருந்து எவ்வளவு பின்தங்கியிருக்கிறது! இந்திய மக்களின் நலன்களில் நின்றும், மார்க்ஸிஸ-லெனினிஸ தத்துவத்தின் அடிப்படை கோட்பாடுகளிலும், பாட்டாளி சர்வதேசீய வாதத்திலும் நின்றும் எவ்வளவு தூரம் இவர்கள் விலகிவிட்டார்கள்!

சீன மக்கள் எந்த விதத்திலும் இந்தியாவுக்கு எதிரானவர்கள் அல்ல. அப்படியே இந்திய மக்களும் சீனுவுக்கு எதிரானவர்கள் அல்ல. பரஸ்பரம் கௌரவிக்க வேண்டும், நட்புறவுடன் ஒன்ருய் வாழ வேண்டுமென்பதே சீன மக்களினதும் இந்திய மக்களினதும் பொதுவான விருப்பமும் நலனுமாகும். தமது பொருளாதார அரசியல் பிரச்சினை எப்படி தீர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்பது இந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திய மக்களின் சொந்த அலுவலாகும். சீனு இதில் எப்போதுமே தலையிட்டது கிடையாது. இந்திய நிலைமையின் சில அம்சங்களை இக் கட்டுரையில் சுட்டிக் காட்டியிருப்பது உண்மையை தெளிவு படுத்துவதற்காகவே. ஆனல், இந்திய மக்களை எதிர் நோக்கி நிற்கும் கஷ்டங்களைக் கண்டு நாம் என்றுமே மகிழ்ச்சியடைந்தது கிடையாது. மேலும், நேரு அரசாங்கம் இந்திய மக்களின் துயரங்களை புறக்கணித்தும், சீன-இந்திய எல்லையில் நெருக்கடியை உக்கிரப் படுத்தி மோதல்களை விரிவு படுத்தியும் இருப்பதைத் தொடர்ந்து, ஏற்கனவே அவர்கள் மீது சுமத்தப்பட்ட பெரும் பளுவுடன் ராணுவ சுமையையும் தாங்க வேண்டுமே என்பதை பெரிதும் பாரதூரமாக அவதானிக்கிறோம். சுயநலவாத ஆளும் வட்டாரங்கள் இந்திய ராணுவ வீரர்களை பகடைக்காய்களாய் உபயோகிக்கின்றனர்.

இந்தியாவின் பெரும் முதலாளிகளும், பெரும் நிலப் பிரபுக்களும் தம் சொந்த நலன்களையும் லாபங்களையும் பெற இச்சந்தர்ப்பத்தை உபயோகிக்கும் இதே வேளையில், எல்லை மோதல்களில் இந்திய ராணுவ வீரர்கள் அர்த்தமற்ற தியாகங்களை செய்கின்றனர். இப்பேர்பட்ட கஷ்டங்களுக்கு முகம் கொடுத்து நிற்கும் விரிந்து பரந்த இந்திய உழைக்கும் மக்களுக்கு சீன மக்களின் அனுதாபம் உண்டு. இந்திய மக்கள் இந்த இக்கட்டான நிலைமையிலிருந்து தம்மை விடுதலை செய்துக்கொள்வார்கள், கெதியில் இந்தியா செழிப்புற்று பலம் பெறும், இந்திய மக்கள் சந்தோஷ சந்துஷ்டியான வாழ்க்கையை நடத்துவார்கள் என்று சீன மக்கள் உண்மையாக விஸ்வாசிக்கிறார்கள். ஆசியா கண்டத்தில் பலம் வாய்ந்த முற்போக்கு ஜனநாயக இந்தியாவை நாம் காண முடியும் என்று எதிர்பார்க்கிறோம்.

பஞ்சசீல சக-ஜீவனக் கொள்கையின் அடிப்படையில் நேசபூர்வமான பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் பட்சத்தில், இந்தியாவுக்கும் சீனவுக்குமிடையில் சரித்திரம் இட்டுச் சென்ற சிக்கலான சகலப் பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ளலாம் என்று நாம் உறுதியாக விஸ்வாசிக்கிறோம். சீன – பர்மிய, சீன – நேப்பாளிய எல்லைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டது போல, சீன – இந்திய எல்லைப் பிரச்சினைக்கும், நேச முறையில் சமாதான பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீன மக்கள், இந்த நம்பிக்கையிலிருந்து எப்போதாகிலும் தடம்புரண்டதில்லை. இந்திய மக்களுடனும், ஆசிய சமாதானத்திலும் ஆப்பிரிக்க – ஆசிய ஒருமைப்பாட்டிலும் அக்கறை கொண்ட நாடுகளுடனும் மக்களுடனும் இணைந்து, எல்லை மோதல்களை நிறுத்துவதற்கு முயற்சிக்கவும், சமாதான பேச்சுவார்த்தைகளை மறுபடியும் ஆரம்பிக்கவும், சீன-இந்திய எல்லைப் பிரச்சினைக்கு தீர்வு காணவும் எம்மால் சாத்தியமான சகலவற்றையும் செய்ய நாம் தயார். நேரு அரசாங்கத்துக்கு தேசீய நலன்கள் மீதும், இந்திய மக்களின் ஆசை அபிலாஷைகள் மீதும் இன்னும் சற்றேனும் மரியாதை இருந்தால், எல்லையில் மோதல்களை பரப்பி மங்கையைப் புண்ணாக்கிக் கொள்ள விரும்பாதிருந்தால், ஏகாதிபத்தியவாதிகள் இதனால் லாபமடையாது இருக்க வேண்டுமென்றால் நேரு அரசாங்கம் இது போன்ற தகுந்த முயற்சிகள் எடுக்க வேண்டும்.

சீன-இந்திய மக்களுக்கிடையில் நட்புறவை பேணிப் பாதுகாத்து பலப்படுத்துவது இரு நாடுகளினதும் 110 கோடி மக்களின் பொது நலன்களுடன் ஒத்து செல்வது மாத்திரமலலாது, ஆசியாவிலும் உலகம் பூராவிலும் உள்ள சமாதானப் பிரேமிகளான மக்களின் பொது அபிலாஷையுடனும் இணக்கமுடையதாக இருக்கும். இபபெரும் நட்புறவை எச்சக்தியாலும் களைக்கவோ கவிழ்க்கவோ முடியாது. இந்திய பிற்போக்கு வட்டாரங்களால் சீன-இந்திய எல்லையில் தூண்டிவிடப்பட்ட மோதல்கள் சீன-இந்திய மக்களுக்கிடையில் நிலவும் உண்மையான நட்புறவை பலவீனப் படுத்தவோ களைத்துவிடவோ முடியாது. சீன – இந்திய நட்புறவை கவிழ்த்துவிடும் முயற்சியில, இந்தியாவின் உள்ளும் வெளியிலுமிருந்து சீன – எதிர்ப்பு இயக்கத்தை பொறித்தவர்கள், அதனால் ஒருகாலும் எவ்வித பிரயோஜனமும் பெறமுடியாது என்று கூற முடியும். அதனால் அவர்கள் தம் பிற்போக்கு உருவத்தை அம்பலப்படுத்திக் கொள்வதுடன், படுதோல்வியடைவார்கள்.

சீன இந்திய மக்களின் பெரும் நட்புறவுக்கு இமாலயம் காரக்கோரம் ஆகிய பர்வதங்கள் சான்று பகர்வதாக. தொன்று தொட்டு வளர்ந்துள்ள சீன – இந்திய நட்புறவு, தற்சமயம் இருள் படிந்ததாய் இருந்தாலும், இமாலயத்தையும் காரக்கோரத்தையும் போல் என்றென்றும் வளர்ந்தோங்கி நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு, கொட்டா ரோடி
லுள்ள சூரியா அச்சகத்
தினரால் அச்சிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org